Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY


දිනක්කතිර්

ஒளி - 02 - கதிர் - 47 05.06.2001 செவ்வாய்க்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

சகல விதமான அச்சு வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய இடம்

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

திருமலை வீதி, மட்டக்களப்பு.



1.எதிர்ப்பாளர்களை விரட்டும் பொலிஸார்2.நேபாள மக்கள் இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை 3.கதறி அழும் மக்கள் 4. மன்னர் கஜனேந்திரா மகிழ்ச்சியுடனா? 5.அச்சம் காரணமாக புது டில்லி வந்துவிட்ட காதலி ராணா.

# நேபாளத்தில் கலகம் வெடித்தது காத்மண்டுவில் ஊரடங்கு!

## இளவரசர் நினைவு திரும்பாமலே மாண்டார்.

## காபந்து மன்னர் புதிய மன்னராக பட்டம் சூடினார்.

## கொலைச் சதியில் இந்தியா மீதும் நேபாளிகள் சந்தேகம்!

(காத்மண்டு)

**நேபாள மன்னர் குடும்பம் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இக்கொலைகளைச் செய்தவர் என்று முதலில் கூறப்பட்ட தமது இளவரசர் திபேந்திரா தன்னைத்தானே சுட்டுக் கொண்டதாகக் கூறப்பட்டு மருத்துவ மனையில் நினைவிழந்த நிலையில் இருந்ததாகச் சொல்லப்பட்டது. இவரும் நேற்றுக்காலை மாண்டதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து காபந்து மன்னராக அறிவிக்கப்பட்டிருந்த மன்னர் பிரேந்திராவின் சகோதரர் புதிய மன்னராக முடிசூட்டிக் கொண்டார்.**

மன்னர் பிரேந்திராவும், மகாராணி ஐஸ்வர்யாவும் மற்றும் அரச குடும்பத்தினரும் கொல்லப் பட்டதற்கு புதிய மன்னாரகப் பதவியேற்றுள்ள கஜநேந்திராவே காரணமெனக் கருதும் நேபாள மக்கள் பலரும் மன்னர் மாளிகையை நோக்கி ஆவேசத்துடன் ''படையெடுக்கத் தொடங்கினர். கஜனேந்திராவே கொலைகாரன் என்ற கோஷங்களுடன் மாளிகையை நோக்கிச் சென்ற ஆயிரக்கணக்கான மக்களைத் தடுத்து நிறுத்துவதற்கு பொலிசாரும், படையினரும் எடுத்த முயற்சிகள் பயனளிக்காமல் போகவே முதலில் குண்டாந்தடிப் பிரயோகமும் பின்னர் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்து பயனளிக்காமல் போகவே பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் ஒருவர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதைத் தொடர்ந்து நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்ப ட்டுள்ளது.

### கொலைகளுக்கும் இளவரசருக்கும் தொடர்பில்லை.

மன்னர் பிரேந்திராவையும் மற்றும் அரண்மனைக் கொலைகளுக்கும் இளவரசர் திபேந்திராவுக்கும் தொடர்பில்லை. அவர் வேறு எதையும் செய்தாலும் செய்வாரே தவிர, இது போன்ற கொலைகளை அவர் ஒரு போதும் செய்திருக்கமாட்டார் என்று நேபாள மக்களில் பலரும் நேற்று வீதிகளில் கோஷமிட்டனர். மன்னரும் மகாராணி ஐஸ்வர்யாவும் மற்றும் அரச குடும்பத்தினரும் கொல்லப்பட்ட மன்னர் மாளிகையை நோக்கி மக்கள் முண்டியடித்துக் கொண்டு ஆவேசத்துடன் செல்ல முயன்ற

(8ம் பக்கம் பார்க்க)

## இன்று நபிகளின் பிறந்த நாள்; பள்ளி வாயல்களில் பல நிகழ்வுகள்

(ஏ.எல்.எம் பழுலுல்லர்ஹ)

இன்று 5ம் திகதி கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த நாள் நிகழ்வுகள் இடம் பெறுகின்றன.

நபிகள் நாயகம் புகழ் கூறும் புனித மௌலீத் சரீப்லீவை பவங்களால் ஓதப்பட்டு வந்த இந்தப் பாராயாண வைபவம் 12வது நாளான இன்று பெரும்பாலான பள்ளிவாயல்களில் தமாம் செய்யப்படுகின்றது.

காத்தான்குடி,ஏறாவூர், ஓட்டமாவடி, கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய இன்னோரன்ன பள்ளிவாயல்களில் தமாம் செய்யப்படுவதுடன் மீலாத் விழாக்களும் பரவலாக இடம் பெறவுள்ளதும் குறிப்பிடதக்கது.

## இலங்கை இனப்பிரச்சினை குறித்துரணில் – ஜெயா பேச்சு

(விஷேட நிருபர்)

இந்தியாவிற்கு விஜயம் மேற் கொண்டிருந்த எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தமிழ் நாடு சென்று பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின் போது வடக்கு கிழக்கு இனப்பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணும் முயற்சிகளுக்கு இந்தியா முழுமையான ஆதரவினையும் ஒத்துமைப்பையும் வழங்கும் என்று இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் ரணில்

(8ம் பக்கம் பார்க்க)

### எங்களை திகம்பரம்

யுத்த சூழ்நிலையிலும் நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காண்கிறது.

செய்தி



அப்படியெண்டா சமாதானப் பேச்சுவார்த்தைகள உட்டுத் தள்ளிப் போட்டு போராட வேண்டியது தானா......

## 'டைம்ஸ்' ஒப் இந்தியா தீயிட்டு எரிப்பு!

(வெளிநாட்டு செய்தி சேவை)

பட்டத்து இளவரசர் திபேந்திரா மணரம் அடைந்ததைத் தொடர்ந்து ஆட்சியாளராக நியமிக்கபட்டிருந்த கஜனேந்திரா நேபாள அரசராகப் பட்டம் சூட்டப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை நேபாள அரசின் அந்தரங்க குழு அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மறைந்த நேபாள இளவரசர் துப்பாக்கியோடு இருப்பது போன்ற படத்தோடு அரச குடும்பப் படுகொலைகள் தொடர்பான செய்திகள் வெளியிட்டிருந்த 'டைம்ஸ் ஒப் இந்தியா' என்ற ஆங்கில நாளிதழை நேபாள மக்கள் நேற்று முன்தினம் தீயிட்டு எரித்துள்ளார்கள்.

### பிரசவதாய் பற்றி புகார் இல்லை

(மட்டக்களப்பு)

'தாதியர் அசமந்தம்,சிசுவைக் காப்பாற்றிய தாய்' என்ற தலைப்பில் பிரசவத்துக்காக பட்டிருப்பு களுவாஞ்சிகுடி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தாயார் ஒருவர் பற்றி கடந்த முதலாம் திகதி தினக்கதிர் பத்திரிகையில் 'வெளிவந்த செய்தியில் 'குறிப்பிடப்பட்டிருந்த படி எந்தச் சம்பவமும் களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் நடைபெறவில்லை என்றும் இப்படி சம்பவம் நடந்ததாக தம்மிடம் யாரும் புகார் செய்யவில்லை என்றும் வைத்திய சாலை அதிகாரி டாக்டர் கே.வசீகரன் தெரிவிக்கிறார்.

உடனடி வேலைவாய்ப்பு

1. முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வீட்டுப் பணிப்பெண்களுக்கு முற்றிலும் இலவசமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்படும். வயதெல்லை 25 தொடக்கம் 40 வரை (குவைத், பஹ்ரைன், ஜோர்தான், டோகா கட்டார் போன்ற நாடுகளுக்கும் அனுப்பப்படும்)

1. டோகா கட்டார் இலும் உடனடி வேலைவாய்ப்பு (ஆண்களுக்கு)

- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM INSTALLER,
- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM FITTER.
- TILE PIXER,
- MASON,
- CARPENTER,
- PAINTER,
- ELECTRICIAN,
- ELECTRONIC TECHNICIAN

போன்ற வேலைவாய்ப்புகளும் உண்டு சான்றிதழ்களுடன் நேரடியாக வரவும்.

உடனடிப் பயணம்

நியூ பாஹிம் என்டப்பிரைஸஸ்

LL No -736

283/1 பிரதான வீதி, கொழும்பு.

விசாரணைகளுக்கு:

இல:15/1, 15/2, பிரதான வீதி, காத்தான்குடி -02

065-47090

ADVT.

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155.திருமலை வீதி,
மட்டக்களப்பு,
தொ.பே.065.22554

E-mail :- tkathir@snet.lk


## சமூக ஒற்றுமை

தேவர் சிறை மீட்க ஒரு திருமுருகன் வந்துதித்த 'வைகாசி விசாகம்', இறைதூதர் முகம்மது நபி (ஸல்) அவர்களின் ஜனனமய தினமான மீலாத், இலங்கைக்கு பௌத்த தர்மத்தை மகிந்த தேரர் அறிமுகப்படுத்திய 'போஸன்' ஆகிய பெரும் சமூக வைபவங்கள் ஒருங்கே நிகழும் நன்னாள் இந்நாள்.

காலச் சுழற்சியின் மூலம் இயற்கையே இந்த மத, இன,ஒருமைப்பாட்டைக் காலத்திற்குக் காலம் வலியுறுத்தி வரும் போது,

காலாதி காலமாக இம் மதக் குழுக்களிடையே பேணிப்பாதுகாத்து வரும் ஐக்கிய விழுமியங்களை - மின்னல் போல் தோன்றி மறையும் பேதங்களால் சீர் குலைந்து விடக் கூடாது. சீர் குலையவும் விடக்கூடாது.

இலங்கைத் தீவில் இன, மத குரோதங்களாலும் பேரினவாதப் பேரிரைச்சல்களாலும் சமூக வாழ்வு அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் தமிழர்களும் முஸ்லீம்களும் ஒருவருக்கொருவர் உறுதுணையாகிக் கொள்ள வேண்டும். கறுப்பு ஜூலைகளும், மாவனல்லைச் சம்பவங்களும் தலையெடுத்துக் கொண்டிருக்கும் சமகாலவரலாற்றுப் போக்கில் தமிழ் - முஸ்லிம் உறவுகள் வலுப்பெற்று அவர்கள் தம்மைக் தற்காத்துக் கொள்ள வேண்டும். இது காலத்தின் தேவையுமாகும்.

இலங்கை வாழ் தமிழர்களும், முஸலீம் பெருமக்களும் தாய் மொழியாம் தமிழ் மொழியால் சகோதரப் பிணைப்புடையவர்கள். நாட்டின் கிழக்குக் கரையைப் பொறுத்த வரையில் புவியியல் ரீதியில் அண்டை அயலாராக பிட்டுப் போல் கட்டுப் பட்டு வாழ்பவர்கள் - வாழ்ந்தாக வேண்டியவர்கள்.

இந்த வாழ்வும், வளமும் சில தசாப்தங்களுக்கு முன்னர் செழித்தோங்கி இருந்தது. இடையே சொற்ப காலத்துள் அதில் தொய்வு ஏற்பட்டமை ஏதோ கசப்பான உண்மைதான். இதற்கு வளர்ந்து வரும் தமிழ்- முஸ்லீம் இளஞ் சந்ததியினரிடையே காலத்தின் கொடுமையால் தோன்றிய புரிந்துணர்வின்மையும் விரிசலும் காரணம் எனலாம்.

'ஒரு காலத் தமிழ் நாடு இதுதானடா. இதை உன்காலத் தமிழ் நாடு அறியாதடா''. என்ற கவிஞர் கண்ணதாசனின் கவிக்குரலில் இன்றைய இளம் தமிழ் முஸ்லீம் சந்ததிக்கு ஈரினத்தவர்களிடையேயான பழமைச் சிறப்பை நினைவூட்ட வேண்டியுள்ளது.

செய்திப் பத்திரிகைகளும் மற்றும் ஊடகங்களும் வெறுமனே அன்றாட உலக நடப்புக்களை மாத்திரம் ஆக்கங்களாகப் பதிப்பதோடு அவற்றின் கடமைகள் முடிந்து விடுவதில்லை. சம காலத்தில் அன்றாட சம்பவங்கள் பெரும்பாலும் சமூகக் குரோதங்களையும் கலாசார சீர்கேடுகளையும் விளைவிக்கும் தன்மைகளைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இக்களேபரங்களின் மத்தியில் சமூகத்தை நன்னெறிப்படுத்தும் தார்மீகக் கடமை பத்திரிகைகளுக்கும் ஊடகங்களுக்கும் இருக்கிறது. இன்பத் தமிழ் எங்கள் மொழி - இஸ்லாம் வழி என்றும், 'இருதயத்தின் ஈரிதழ் போல்' இங்கு இந்து முஸ்லீம் - ஒரு வயிற்றுப் பாலகர் போலுள்ளோம்' எனவும் நம் முன்னோர் தாய்மொழி உறுதிப் பாட்டையும் தமிழர் - முஸ்லீம்கள் ஐக்கிய உரிமைப் பாட்டையும் பேசியும் எழுதியும் வந்துள்ளனர்.

ஆயிரம் சண்டை சச்சரவுகள் வந்து போனாலும் தமிழ் முஸ்லீம் 'அண்ணன்- தம்பி பாசம்' விட்டுப் போகவில்லை. இந்தப் பாசம் வளர்ந்து வரும் எமது இளந் தலைமுறையினர் உள்ளங்களில் ஊன்றி விதைக்கப்படவேண்டும். அது தமிழ் தேசிய ஒற்றுமை விருட்சமாக வளர்ந்தோங்கி தலைமுறை தலைமுறையாக நிழல் பரப்ப வேண்டும்.

ஐந்தைந்து வருடங்களுக்கு ஒரு தடவை 'கொடியேற்றி இறக்கும்' அரசியல் பிரசாரத் தந்துரோபாயங்கள் இந்தப் பயன் தரும் ஐக்கிய விருட்சத்தை வெட்டி விழுத்திடக் கூடாது. காலநிலை சுற்றுச் சூழலைப் பாதித்து உலகை காலநிலைச் சீர்கேடாக வானிலை மாற்றங்களுக்கு இலக்காக்குவது போல ஐக்கிய விருட்சத்தின் அழிப்பும் சமூகத்தின் இன ,மத, பண்பாட்டு விழுமியங்களையும் பழுதுபடுத்தி விடும். இதற்கு இடம் கொடாமல் காப்பாற்ற வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும்.

இக்கைங்கரியத்தை இந்து' இஸ்லாமிய சமயக் குரவர்களும் இங்கு ஆசிர்வதித்துள்ளமை எமக்குத் தெம்பைத் தருகிறது.

தமிழ்முஸ்லீம் சகோதரத்துவ மறுமலர்ச்சி விஷேட அனுபந்தத்தை இந்தப் புண்ணிய நாளில் வெளிவரும் தினக் கதிர் இணைத்தக் கொண்டமை குறித்தக் அடக்கத்துடன் பெருமைப்படுகின்றோம்.

# தமிழ் - முஸ்லிம் உறவில் தொய்வு தோன்றக் காரணம் என்ன..?

### -வித்துவான் கமலநாதன் ஆதங்கம்-



தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு பன்னெடுங் காலமாக சகோதர வாஞ்சையுடன் வாழ்ந்து வரும் தமிழர், முஸ்லீம்கள் உறவில் ஒரு தொய்வு நிலை தோன்றக் காரணங்கள் என்னவாக இருக்கும்?

மட்டக்களப்பு கல்விமான் வித்துவான் சா.இ.கமலநாதனிடம் பேச்சுக் கொடுத்தபோது மேற் கண்டவாறு கேட்டோம்.

வித்துவான் கமல நாதன் தமிழ் ஆசிரியராக தமது பொது வாழ்வைத் தொடங்கி பல்கலைக் கழகப் பட்டதாரியர்கிய மட்டுமாநகரின் அதியுயர் பாரம்பரியக் கல்விக் கூடமான புனித மிக்கேல் கல்லூரியின் அதிபராக மிளிர்ந்து இளைப் பாறியவர். ஏட்டுச் சுவடி ஆய்வாளர். கிழக்குப் பல்கலைக் கழகத்தால் இலக்கிய கலாநிதிப் பட்டமும் , வடகிழக்கு ஆளுனர் விருதும் பெற்று சமூகத்தில் உயர்ந்து நிற்பவர். தமிழரசுத் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் காலத்தில் தமிழ் பேசும் இனத்தின் உரிமைப் போராட்டங்களில் முன் வந்து தோள் கொடுத்தவர்.

இத்தகைய அனுபவ முதிர்ச்சியோடு அவர் 'தினக்கதிர்' செய்தியாளரிடம் பேசினார்.

1915ம் ஆண்டிற்கு அவர் நம்மை அழைத்துச் சென்றார்.

அக்காலத்தில் மட்டுநகர் அர்ச்.மைக்கல் கல்லூரியில் கணிசமானளவு முஸ்லிம் மாணவர்கள் படித்தனர். அவர்களது இஸ்லாமிய கலாசாரத் தனித் தன்மைகளைப் பேணுவ தற்காக தனியான ஒரு விடுதி அமைக்கப்பட்டது. அவ்விடுதி மேற்பார்வையாளராக ஒரு முஸ்லிம் ஆசிரியரே நியமிக்கப்பட்டார். அவரும் அதே கல்லூரியில் படித்து அதே கல்லூரியில் பணியாற்றியவர். அவர் யார் தெரியுமா? பிற்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் அறியப்பட்ட முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்களாகும்.

இவ்வாறே மட்டுநகர் மெதடிஸ்த மத்திய கல்லூரி கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயம், கோட்டைமுனை அரசினர் கல்லூரி முதலானவற்றில் படித்த முஸ்லிம் மாணவர்களில் பலர் இந்த நாட்டிலும் வெளி நாட்டிலும் அதியுயர் பதவிகளில் பிரகாசித்தார்கள். அரசியலை பொறுத்த வரையில் சிவானந்தியன்களான சம்மாந்துறை எம்.ஏ.மஜீத், மூதூர் மஜீத் முதலானோரும் மத்திய கல்லூரியின் நிந்தவூர் எம்.எம். முஸ்தபா முதலானோரும் மைக்கல் கல்லூரியின் அலிஸாஹிர் மௌலானா எம்.பி ரிஸ்வி சின்ன லெவ்வை எம்.பி முதலானோரும் அரசினர் கல்லூரியின் முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம்.மன்சூர், மருதமுனை மசூர் மௌலானா, கல்முனைக் குடி ஏ.எம்.சம்சுதீன் முதலானோரும் நாட றிந்த பிரமுகர்களாக விளங்கினார்கள்.

இத்தனைக்கும் மேற்படி கல்வி நிறுவனங்கள் அனைத்தும் தமிழ் மாணவர்களையும் தமிழ் அதிபர், ஆசிரியர்களையும் பெரும் பான்மை ஆதிக்கமாகக் கொண்டவையாகும். முஸ்லிம் மாணவர்கள் சிறிய தொகையினர் என ஓரங்கட்டப்பட்டதில்லை. தமிழ்- முஸ்லிம் மாண்வர்களும் ஆசிரியா் களும் மிகு அந்நியோ ான்யமாக வாழ்ந்ததைப் பார்க்க லாம்.

ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கு முன்னர் ஒரேயொரு முஸ்லிம் மாணவராக மட்/புளியடிக்குடா புனித செபஸ்தியார் றோ.க ஆண்கள் பாடசாலையில் தமிழ் மாணவர்களோடு ஒன்றாக தமிழ் ஆசிரியர்களால் படிப்பிக்கப் பட்டவர் பின்னர் அங்கு ஆசிரியரான ஜனாப் ஆதம்பாவா மாஸ்டரை எம்மால் மறக்க முடியாது. அத்தோடு அப் பாடசாலையில் அதிபர் அமரர் தம்பிராசா மாஸ்டரின் முயற்சியால் பல முஸ்லிம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு நாட்டின் பல பாகங்களிலும் ஆசிரியர்களாகப் பணி புரிந்திருக்கிறார்கள். இதே போல் அர்ச் மைக்கல் கல்லூரியில் தமிழ் மாணவர்களோடு படித்து முதன்முதலில் பல்கலைக் கழக மருத்தவ பீடத்துக்குத் தெரிவான மாணவி காத்தான்குடி செல்வி அலிமா உம்மா, தொடர்ந்து செல்வி றஹீம் டாக்டரானார்.

இவற்றையெல்லாம் நாம் இங்கு குறிப்பிடு வதற்குக் காரணம் ஆண்கள் பாடசாலையில் தமிழ் மாணவர்களோடு தத்தம் நம்பிக் கைகளுக்கும், நாகரீகத்துக்கும் பங்கமின்றிப் பழகி உயர்ச்சியடைய நல்வாய்ப்புக்கள் தரப்பட்டன என்பதை வலியுறுத்தவே.

## சித்திரபுத்திரன்

மட்டக்களப்பு மாவட்டம் தமிழ்ப் பெரும் பான்மைக் கல்வி மாவட்டமான போதிலும் இங்கே மிகப் பெரும்பாலும் தமிழ் மாணவர்கள் ஆசிரியர்கள் இருக்கும் இம்மாவட்டத்தின் கல்விப் பணிப்பாளர்களாக ஜனாப்கள் எம்.சமீம், சரீப்,ஹனான், ஏ.எம்.மஜீத் ஆகிய நான்கு முஸ்லிம் கல்வி மான்கள் எவ்விதப் பாகுபாடுமின்றிக் கடமையாற்றியிருக்கிறார்கள்.

இவர்களில் கல்விப் பணிப்பாளர் சமீம் தன்னை "திரு சமீம்" எனக் குறிப்பிடுவதையே பெரிதும் விரும்பினார்.

வர்த்தக வியாபாரத் துறையில் மட்டுமாநகரில் தமிழ் வாடிக்கையாளர்களையும், பாவனையாளர்களையும் சார்ந்திருந்த முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் கொடிகட்டிப் பறந்தன. (திருமலை வீதியிலே அலியார் பலசரக்குக் கடை, றசீதியா ஹொட்டல், யூசப் ஹாஜியார் கடை திருமலை வீதியிலுள்ள புகையிரதச் சந்தியை "ஈசூப்பார் ஹாஜியார் சந்தி" என்றே அக்காலத்தில் பாமர மக்கள் குறிப்பிடுவார்கள்.) மற்றும் பஜார் வீதியிலே சொலுக்கார் இரும்புக் கடை, அஷ்காபியா மணிக்கூட்டுக் கடை, கபீர் ஸ்டோர் ரேடியோக்கடை முதலாயின பழைய தலை முறை யின் நினைவில் நிற்பவை.

அரசியல் துறையை எடுத்துக் கொண்டால் சட்டசபைக் காலத்தில் முஸ்லிம்களை கணிசமான தொகையினராக உள்ளடக்கிய அப்போதைய கிழக்கு மாகாணத்தில் அட்வகேட் ஈ.ஆர். தம்பிமுத்து தமிழ்- முஸ்லிம் மக்களின் ஏக பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் வி.நல்லையா மாஸ்டர், தர்மரெத்தினம் வன்னியனார் ஆகியோர் மட்டக்களப்பு வடக்கு, மட்டக்களப்பு தெற்கு ஆகிய கிழக்கின் இரு தொகுதிகளிலும் தமிழ், முஸ்லிம் மக்களின் சட்ட சபை பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். 1947ல் நடந்த முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலிலேயே மட்டக்களப்புத் தொகுதியில் முதலியார் சின்னலெவ்வை வெற்றி வாகை சூடினார். கல்முனையில் எம்.எஸ். காரியப்பரும், பொத்துவில்லில் எம்.எம்.முஸ்தபாவும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களாகப் போட்டியிட்டு தமிழ் வாக்காளர்களின் ஆதரவுடன் 1956 பொதுத் தேர்தலில் வெற்றியீட்டினர். அத்தேர்தலில் கல்குடாத் தொகுதியில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் பொ.மாணிக்கவாசகரைத் தோற்கடித்து ஜனாப் மாக்கான் மரைக்கார் வென்றார். 1960 பொதுத் தேர்தல்கள் வரை தமிழ் வாக்காளர்களின் ''நிர்ணய வாக்குகள்" மூலம் முஸ்லிம் வேட்பாளர்கள் பாராளு மன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். அப்போது அரசியலில் தமிழ் முஸ்லிம் பேதம் இருக்கவில்லை.

"சரி தான் சேர், இப்போது இச்சந்திப்பின் தொடக்கத்தில் நாம் பீடிகை போட்டு எழுப்பிய கேள்விக்கு வருவோமா? என்றதும் வித்துவான் கமலநாதன் சொன்னதாவது:-

"தமிழர் - முஸ்லிம்கள் ஒற்றுமை வலுப்பெற நாம் மேலே விபரித்த எந்தக் காரணிகள் உறுதுணையாக இருந்தனவோ அந்தக் காரணிகளில் ஏற்பட்ட தொய்வுதான் ஒற்றுமை சீர்குலைவுக்கும் காரணிகளாகிவிட்டன. அதிலும் பாராளு மன்றக் கதிரைகளை பிடிப்பதற்காக அரசியல்வாதிகளால் கையாளப்பட்ட பிரசாரத் தந்திரங்களும், அரசியற் சூழ்ச்சிகளையும் குறிப்பிடலாம். அடுத்து பாடசாலை மட்டத்திலிருந்தே தமிழ்- முஸ்லிம் மாணவர்கள் தனித்தனியாகப் பிரிந்து விட்டனர். அதனால் இன்றைய இளஞ் சந்ததியினர் "தமிழர் - முஸ்லிம்கள்'' என்ற மனோபாவத்துடன் வெவ்வேறான சூழல்களில் வளர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. எது எவ்வாறாயினும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்களும் முஸ்லிம்களும் தொன்று தொட்டு நிலவிய சகோதரத்துவத்துடன் வாழ்வதே இரு சாராருக்கும் விமோசனம் தரும்"

# ஓட்டமாவடியில் நான்கு தொழிலாளர் கடத்தப்பட்டனர்.

(ஏறாவூர் நிருபர்)

வாழைச்சேனை ஓட்டமாவடியைச் சேர்ந்த முஸ்லிம் தொழிலாளர்கள் நான்கு பேர் (ஞாயிறு) நேற்றிரவு இனந்தெரியாத ஆயுதக் குழு ஒன்றினால் கடத்திச் செல்லப் பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஓட்டமாவடி மடுவத்தடியிலுள்ள அரிசி ஆலைத் தொழிலாளர்கள் இருவரும் காவத்தை முனை பிரதேசத்தில் உள்ள இறால் பண்ணை ஒன்றில் கூலி வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளிகள் இருவரும் மற்றும் ஜெனரேட்டர் ஒன்றையும் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட இறால் பண்ணையில் இருந்த ஜெனரேட்டர் ஒன்று கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரும் அபகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவங்கள் குறித்து வாழைச்சேனைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் சோதனை அதிகரிப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சோதனை நடவடிக்கைகளும், சுற்றி வளைத்துத் தேடுதல்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்திலுள்ள கண்ணகை அம்மன் ஆலயங்களில் வருடாந்த உற்சவங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மட்டக்களப்பு நகரில் சன நடமாட்டம் அதிகரித்துள்ளது.

ஆலயங்களுக்குப் பெருமளவு பக்தர்கள் வருகை தருகின்றனர். இதனிடையே பொலிஸாரும், இராணுவத்தினரும் சோதனைச் சாவடிகளில் வழமைக்கு மாறாக கடுமையான சோதனை நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

கோட்டை முனைப் பாலத்திலுள்ள இராணுவ சோதனைச் சாவடியில் சகல மோட்டார் சைக்கிளோட்டிகளும், தமது வாகனத்திலிருந்து இறக்கப்பட்டு சைக்கிளை உருட்டிக்கொண்டே செல்லுமாறு பணிக்கப்படுகின்றனர். இதனால் இப்பாதுகாப்பு சோதனை நிலையத்தில் நீண்ட தூர 'கியூ' வரிசையில் பயணிகள் காத்து நிற்கின்றனர்.




தேசிய சுகாதார வாரத்தை ஒட்டி மட்டக்களப்பு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணியகம் ஏற்பாடு செய்திருந்த சுகாதார விழாப் - போட்டியில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எஸ். நவநீதன் பரிசு வழங்குவதையும் அருகில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம். தேவராசன் நிற்பதையும் படத்தில் காணலாம்

# ஹிஸ்புல்லாவின் மீலாத் தினச் செய்தி

(காத்தான்குடி நிருபர்)

அமைதியும் சமாதானமுமான வாழ்க்கை முறையை முழு உலகிற்கும் அறிமுகப்படுத்தியவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவர் அத்தகைய புனிதரின் ஜனன தினத்தைத நினைவு கூறும் இம் மீலாத் திருநாளில் நாடு இழந்து தவிக்கும் சமாதானத்தை அடையப் பிரார்த்திப்போமாக. என முன்னாள் பிரதி அமைச்சரும் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபைத் தலைவருமான எம். எல். ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் வெளியிட்டுள்ள மீலாத் தினச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

சொல்வதைச் செய்வதிலும், செய்வதைச் சொல்வதிலும் உதாரண புருஷராக மிளிர்ந்தவர் கண்மணி நாயகம் அவர்கள். உலகம் சமாதானத்தை இழந்து தவிப்பதற்கு நபிகளாரின் நற்போதனைகளை நழுவ விட்டதும் ஒரு காரணமாகும்.

சமாதானத்தின் ஒளிக்கீறு தென்படும் அக்காலக் கட்டத்தில் உலகிற்கு இருளகற்றி ஒளிபாய்ச்சிய உத்தம தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அமுத போதனைகளை எடுத்து ஒழுகுதல் அவசியமாகும் என மீலாத் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 2 பிள்ளைகளின் தந்தையை காணவில்லை

2 பிள்ளைகளின் தந்தையான ரெங்கையா லக்ஸ்மன் (வயது 42) என்பவரை கடந்த 4 நாட்களுக்கு மேலாக காணவில்லை என உறவினர்கள் தெரிவிக் கிறார்கள்.

மன நோயாளியான இவர் அண்மையில் நாட்டு வைத்தியம் செய்யப்பட்ட நிலையிலேயே இவர் காணாமல் போயுள்ளார்.

இருதய புரம் மேற்கு 7ம் குறுக்கு வீதியில் வசித்து வந்த இவர் இறுதியாக சாரன் அணிந்த நிலையில் வெற்று மேனியுடன் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இவர் சம்பந்தமான விபரங்கள் தெரிந்தவர்கள் ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸில் பணிபுரியும் நாதன் என்பவருடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் தொலைபேசி:- 065-24460

# கடத்தப்பட்டவரை விடுவிக்க கோரிக்கை

(ஏ.எம்.எம். பழுலுல்லாஹ்)

கடத்தப்பட்டவரை விடுவிக்குமாறு காத்தான்குடி பள்ளிவாயல்கள் சம்மேளனம் வேண்டுகோள் ஒன்றை விடுத்து அறிக்கை ஒன்றினை பத்திரிகைகளுக்கு விடுத்துள்ளது.

காத்தான்குடியைச் சேர்ந்த ஹயத்து முஹமது எம். மஹ்ருப் என்பவர் கடந்த 18-5-2001ல் கடத்தப்பட்டு (கூலியாள்) இன்றுடன் 16 நாட்களாகியும் விடுவிக்கப் படவில்லை

இவரது ஆறு மாத கர்ப்பிணியான மனைவியும் இரு பெண் குழந்தைகளும் அநாதரவாக ஆதரவற்ற நிலையில் உள்ளனர்

அப்பாவியான மஹ்ரூபை மனிதாபிமான அடிப்ப டையில் விரைவாக விடுவித்து இனங்களுக் கிடையே நல்லுறவும் ,ஐக்கியமும் தொடர்ந்து பேணப்பட வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.




இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட எழுச்சி மாநாட்டில் சிரேஷ்ட செய்தியாளர் ஜி.நடேசன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். கிழக்குப்பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி பேராசிரியர் எம்.ரவீந்திரநாத் விருது வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: காத்தான்குடி நிருபர் )

# வடக்கு - கிழக்கு சித்த வைத்தியம் புறக்கணிப்பு

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கு சித்த வைத்தியர்கள் பல வழிகளிலும் புறக்கணிக்கப்படுவதாகவும் கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கம் கவலை தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

வெளி நாட்டு உதவியுடன் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் சுதேச வைத்தியசாலைகள், மூலிகைப் பண்ணைகள் மருத்துவப் பண்ணைகள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

தென்னிலங்கை சித்த வைத்தியர்களுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்படும் காணிகள் வீடமைப்பு உதவிகள் வடக்கு கிழக்கு சித்த வைத்தியர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

* பல வழிகளிலும் சித்த வைத்தியர்கள் பாரபட்சம் காட்டப்படுகின்றனர் என்று கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்முனைக் கடற்கரைக் கண்ணகியே



புற்கேணியில் பொற்பூவையே கல்முனைப்
பூம்புகார் புரத்துப் பாவையே!
வேப்பிலையினுள்ளே வாழ்பவளே! -எங்கள்
வேதகியாயிருந் தாழ்பவளே!
அற்புதம் பற்பல புரிபவளே! -அடியார்க்கு
ஆனந்த வாழ்வையே தருபவளே!
பெற்றவளாயெண்ணி யுன்னையே நன்றியுடன்
பேணித் தூதித்தோம் அன்னையே!

கூற்றுவனிடமுயிரை மீட்டவளே -கூன் காலேன்
குறையுணரக் கட்டளையிட்டவளே!
நாற்றிசையும் போற்றும் தூயவளே -மனத்தை
நல்லன் பால் தேற்றும் தாயவளே!
நற்பதமருள் கர்பூர வல்லியே -நற்றமிழ்
நாதமிசை சிலம்பின் செல்வியே!
எப்போது முன்பென் பாதமே -வீழ்ந்து
இறைஞ்சுதேன் பொழுதே போதுமம்மா!

பொன். ஏ. கலைக்கொழுந்தன்

இன்றைய நந்நாளில் தமிழ் பேசும்
சமூகங்களின் ஒற்றுமைக்காகவும்,
நல் வாழ்வுக்காகவும்
பிரார்த்திக்கின்றார்கள்
சஹோ லைவ்ஸ் ஸ்ரொக்
247, பிரதான வீதி,
மருதமுனை. -
GOLD COIN FEED MILLS LANKA L.T.D

# தமிழ் — முஸ்லிம் சமூக

## வரலாற்றில் தடம் பதித்த இன உறவு நினைவுகள்



இலங்கைத் திருநாடு பல்லினமும் ஒன்று பட்டு வாழ்ந்து வந்த இனிய வீடு. இந்நாட்டில் ஓரினம் மட்டும் அல்லது ஒரு மதம் மட்டும் தனித்திருந்த காலம் இல்லை என்றே கூறலாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இங்கு திராவிடரும், ஒஸ்ரலோயிட் இன மக்களும் வாழ்ந்து வந்ததாக நவீன தொல்லியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்விரு இனத்தவர் மத்தியில் இருந்து வந்த ஒற்றுமையை பண்டைய வழிபாட்டு முறைகளும் வேறு தொல்லியல் சான்றுகளும் எடுத்துக் காட்டுகின்றன. கி.மு.5ம் நூற்றாண்டு அளவில் ஆரியர் இங்கு வந்ததாகக் கருதப்பட்டாலும் அவர்கள் வருகை இனப்பிரச்சினை எதையும் தோற்றுவித்ததென்பதற்கில்லை. பௌத்தத்தின் வருகைக்குப் பின் நிகழ்ந்ததாகக் கூறப்படும் துட்ட காமினி எல்லாளன் யுத்தக் கதைகளெல்லாம் பௌத்த இலக்கிய வாதிகளின் மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்கள் எனலாம். எனினும் பேரின வாதிகளின் ஆதிக்க வெறிகாலப்போக்கில் இனப்பிரச்சினையை இந்நாட்டில் நிரந்தர சொத்துடமையாக்கிற்று. இந்நிலையில் இன ஒற்றுமை பற்றி இங்கு பேசுவது வெறும் அர்த்த மற்ற முயற்சியாகி விடுமோ என கூசுகிறது. இவ்வேளையில் நமது பண்டைய மட்டக்களப்பின் இன ஒற்றுமையை எண்ணிப்பார்க்க உள்ளம் அவாவுகிறது.

இலங்கையில் வெருகல் கங்கை முதல் குமுக்கன் ஓயா வரை நீண்டு கிடந்த பண்டைய மட்டக்களப்பு மாநிலம் தனித்துவமான வரலாற்றினைக் கொண்டது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் திராவிடரும் ஒஸ்ரலோயிற் இன மக்களும் இங்கு நிரம்பி வாழ்ந்தனர். அன்னை வழிபாடு, நாக வழிபாடு, முருக வழிபாடு, தாய் வழி உரிமை, கொம்பு விளையாட்டு இவையெல்லாம் இவர்கள் ஒன்றுபட்டு நமக்கு தந்த முதுசங்கள். பண்டைய நாளில் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வரலாற்று மாற்றங்கள் ஏற்பட அதை ஜீரணிக்காத தொல்குடி மக்களெல்லாம் அமைதிதேடி மட்டக்களப்பையே நாடி வந்தனர். அதாவது பண்டைய மட்டக்களப்பு அமைதியின் உறைவிடமாக விளங்கிற்று. காலப்போக்கில் கலிங்கர், வன்னியர், பணிக்கர், முக்குகர், தொழிலாளர் என தென்னிந்திய இனங்கள் பலவும் மட்டக்களப்பில் குடியேறினாலும் இவர்களால் எல்லாம் இன ஒற்றுமை சீர்குலையாமல் கட்டிக் காக்கப்பட்டு வந்தது.

மட்டக்களப்பு மாநிலத்தில் இஸ்லாமியரின் வருகை வரலாற்றில் புதிய தொரு அத்தியாயமாக அமைகிறது. இவர்கள் வருகையோடு தொடர்பான நிகழ்வு இன ஒற்றுமை தத்துவத்தின் செயல்முறையாக அமைந்தது என்று கூறலாம்.

இஸ்லாமியருள் மட்டக்களப்பில் வந்து ஆரம்பத்தில் கால் பதித்தவர்கள் ஆப்கான்ஸ்தானத்தைச் சேர்ந்த பட்டாணிகள் என்பர். இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன் முக்குகர் என்னும் இனத்தோடு கைகோர்த்து இவர்கள் மட்டக்களப்புக்குள் புகுந்தனர். அக்காலத்தில் மட்டக்களப்பு வாவியின் ஏகபோக உரிமை திமிலர் என்னும் இனத்தவர் கையில் இருந்தது. எனவே இப்பிரதேசத்தின் வணிகத்தை தம் வசப்படுத்துவதற்கு முக்குகருக்கும் பட்டாணிகளுக்கும் திமிலரை வெல்ல வேண்டியது அவசியமாயிற்று. முக்குகர் மட்டக்களப்பில் இருந்து திமிலரை துரத்துவதற்கு பட்டாணிகள் வேண்டிய உதவியெல்லாம் செய்தனர். இம் முயற்சியில் இவர்கள் அடைந்த வெற்றி இவ்விரு பிரிவினரையும் மிக இறுக்கமாக இணைத்து விட்டது. இனத்தால், மதத்தால், மொழியால், வேறுபட்ட இவ்விரு பிரிவினரும் இப் பிரிவினை யெல்லாம் மறந்து மச்சி, மதினி குடி போல ஒன்றுபட்டு வாழத்தலைப்பட் டனர். பட்டாணிகள் இங்கு குடி பதித்து வாழுவதற்கு முக்குக பெண் களைத் துணைவியாக்கி கொண் டதாக மரபு வழியான செய்திகள் கூறுகின்றன.

மேலும் முக்குகர் ஆதிக்கத்தில் இருந்த கோயில் களிலும் வழிபாட்டு முறைகளிலும் இஸ்லாமியராகிய பட்டாணிகள் கௌரவிக்கப்பட்டனர். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் வருடாந்த உற்சவ நிறைவில் இம் மாநிலத்தில் வாழ்ந்த பல்வேறு இனப் பிரிவுகளும் கஞ்சி நிறைத்த திருக்குடுக்கை கொடுத்து பெருமைப் படுத்தப்பட்டனர். இவ்வரிசையில் "பெரிய காரியப்பர் வங்கிசம்", "மாந்தறாகுடியார்" என்னும் இரு பிரிவினர் இஸ்லாமியருள் கௌர விக்கப்பட்டு வந்தனர். மேலும் முக்குகர் திமிலரோடு சண்டை செய்த போது உதவி செய்தமைக்காக "கவறைகள்" என்ற தலைப்பின் கீழ் பதினைந்து திருக்குடுக்கைகள் கூறி பட்டாணிகள் பெருமைப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு பட்டாணிகளுள் மதிப்புப் பெற்ற பதினைந்து பிரிவினரும் பின்வருமாறு. சாலிக்கவறை,

**மகிழை மகேசன்**

பட்டுநூல் கவறை, வரிசைக் கவறை, தையற் கவறை, எண்ணைக் கவறை, சங்குக் கவறை, செட்டிக் கவறை, நாய்க் கவறை, வளையற் கவறை, இரட்டினக் கவறை, குங்குமக் கவறை, ஏற்றுக்கவறை, தொட்டில் கவறை, கம்மலக் கவறை, சிற்றூர் கவறை,

இதை விட தான் தோன்றிஸ்வர ஆலய திருவிழாக்களில் பொட்டுப் பிறையும் சித்தரிக்கப்பட்ட கொடிகள் முன்னால் கொண்டு செல்லப்படுவதையும் தொடர்ந்து காணக்கூடியதாக உள்ளது. இதனால் இஸ்லாமியர் பெருமைப்ப டுத்தப் பட்டனர்.

மேலும் காத்தான்குடி குழந்தையம்மன் கவுறடி கொடியேற்றத்திற்கு தான்தோன்றீஸ்வர பரிபாலகர்கள் கோயில் சின்னங்க ளோடு கலந்து கொள்ளும் பண் டைய மரபும் இங்கு நினைவு கூறத் தக்கது. இவற்றை விட பாண்டிருப்பு திரௌபதியம்மன் கோயிலிலும் வருடாந்த உற்சவத்தின் போது பட்டாணிகளுக்கு மடை வைத்து இஸ்லாமியரைக் கௌரவித்தனர். இவற்றை விட வதனமார் சடங்கு, பரம நயினார் சடங்கு, பெரிய தம்பிரான் சடங்கு முதலியவற்றிலும் இஸ்லாமியரைப் பெருமைப்படுத்தும் வகையில் பட்டாணிகளுக்கு மடை வைக்கப் பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழர்களைப் போலவே இங்கு வாழ்ந்த இஸ்லாமியரும் கொக்கட்டிச்சோலை தான்தோன் றீஸ்வரர் கோயில் பாண்டிருப்பு திரௌபதியம்மன் கோயில், ஏறாவூர் காளி கோயில், சம்மாந்துறை காளி கோயில் முதலிய கோயில்களில் எல்லாம் பெரிதும் மதித்து வந்தனர். சம்மாந்துறை காளி கோயிலில் இஸ்லாமியர் நேர்த்திக் கடன் வைப்பதும், மடைப்பெட்டி கொடுப் பதும் பெரு வழக்காக இருந்து வந்தது.

மேலும் தமிழர்களின் சிறு தெய்வ நம்பிக்கையும் மந்திர வழக்காலும் மட்டக்களப்பு முஸ்லீம்களிடமும் பெரும் செல்வாக்கு பெற்றிருந்தமையையும் பரவலாக காணக் கூடியதாக இருந்தது.

இத்தோடு தமிழர்களின் சோதிட நம்பிக்கை மட்டக்களப்பு இஸ்லாமியரையும் அதில் ஈடுபாடு காட்டச் செய்தது. மேலும் மட்டக்களப்பு நாட்டு வைத்தியத்தை தமிழர்களோடு கைகோர்த்து இஸ்லாமியரும் பேணி வளர்த்து வந்தனர். பாலமுனை பரிகாரியார், மண்முனை பரிகாரியார், மருதமுனைப் பரிகாரியார் என தமிழ் மக்கள் இஸ்லாமியரைத்தேடி கூட்டம் கூட்டமாக வைத்தியம் பெறச் சென்றமை என்றும் நாம் மறக்க முடியாதவை.

சமயத்துறையில் மட்டுமன்றி சமூக வாழ்வின் பல்வேறு துறைகளிலும் தமிழர், இஸ்லாமியர் ஒற்றுமையை மட்டக்களப்பில் காண முடிந்தது. ஆரம்ப காலங்களில் இவ்விரு இனங்களும் ஒரே கிராமத்தில் அருகருகாக இணைந்து வாழ தலைப்பட்டனர். இவர்கள் ஓர் இனத்தின் பொது நிகழ்ச்சிகளிலும், குடும்ப நிகழ்ச்சிகளிலும் மற்றவர் பார்வையாளர்களாகவன்றி பங்காளர்களாகக் கலந்து வந்தனர். அக்கரைப்பற்று, சம்மாந்துறை, நற்பிட்டிமுனை, பாலமுனை, ஏறாவூர் எனப் பல கிராமங்களை இத்தகைய வாழ்க்கை முறைக்கு உதாரணங்களாக கூறலாம்.

மட்டக்களப்புத் தமிழர் தாய் வழி உரிமையை தொடர்ந்து பேணி வருபவர்கள் இதனால் இவர்களோடு இணைந்து வாழ தலைப்பட்ட இஸ்லாமியரும் தாய் வழியுரிமையை பேணி வந்தனர். இங்குள்ள தமிழர்களிடம் தாய் வழி உறவு முறையில் தோன்றி வளர்ந் "குடி" முறை இஸ்லாமியரிடமும் பரந்து காணப்படுகின்றது. இவ் வகையில் பண்டைய நாளில் மட்டக்களப்பு இஸ்லாமியரிடம் காணப்பட்ட 'குடி'களாக பொன்னாச்சிகுடி, வரிசை நாச்சி குடி, முகாந்திர நாச்சி குடி, மாலை கட்டி குடி, கிலைக்கருதன்ணிகுடி, பணிய வீட்டுக் குடி என்பனவற்றை நாடு காட்டு பரவணிக்கல் வெட்டு குறிப்பிடுகிறது. இவற்றை விட வேறு சில குடிகளும் இஸ்லாமிய கிராமங்களில் இருந்து வந்தமையை அறிய முடிகிறது.

மட்டக்களப்பில் காணப்படும் வாழ்க்கை சடங்குகளிலும் இந்த இன ஒற்றுமை பிரதிபலிப் பதை அவதானிக்கலாம். குறிப்பாக தமிழர்களின் திருமண முறை இஸ்லாமியர் திருமண முறையில் பெரும் செல்வாக்கை புகுத்தியுள்ளது. இங்குள்ள தமிழர்கள் மாப்பிள்ளை தெரிவில் மச்சானுக்கு முன்னுரிமை கொடுத்தமையை இஸ்லாமியரிடமும் காணக் கூடியதா கவுள்ளது. மேலும் வெற்றிலை பாக்கு வைத்தல், பந்தல் போடல், தாலிகட்டல், பால் பழம் கொடுத்தல், கேட்டுப்போதல், கால் மாறிப்போதல் என திருமணச் சடங்குகளில் பல்வேறு உட்பிரிவுகளிலும் இவ்வின ஒற்றுமை பேணப்பட்டு வந்தது. குரவை அயர்தலை மட்டக்களப்பு மங்கல நிகழ்ச்சிகளில் எவரும் அவதானிப்பர். இதில் தமிழ்ப் பெண்கள் போலவே இஸ்லாமியப் பெண்கள் ஒன்று திரண்டு பங்கு பற்றுதல் எல்லோரையும் ஈர்க்கத்தக்க நிகழ்ச்சியாகும்.

பண்டைய நாளில் அதிகாரம் செலுத்திய முக்குக வன்னிமைகளும், போடிகளும் தமது குடிமைகளை இஸ்லா மியருக்கும் தொண்டூழியம் செய்ய பணித்திருந்தனர். இவ் வகையில் மட்டக்களப்பின் தேசியப் பறை தமிழர் மத்தியிலும், இஸ்லாமியர் மத்தியிலும் ஒலித்து வந்தது. சுன்னத்துக் கலியாணம், திருமண மருதோன்றி ஊர்வலம் இவற்றில் எல்லாம் மட்டக்களப்பு பறை மேளம் பங்கெடுத்துக் கொண்டது. அக்கரைப் பற்று, சம்மாந்துறை, முதலிய இடங்களில் பள்ளிவாசல் நிகழ்ச்சிகள் சிலவற்றிற்கும் இப்பறையடிப்பது வழககமாக இருந்து வந்தது.

இத் தமிழ் - இஸ்லாம் இன ஒற்றுமையை மட்டக்களப்பு அரசியலிலும் கூட காணக் கூடியதாக இருந்தது. கோல்புறுக் ஆணைக் குழுவின் பின் இஸ்லாமியரும் இங்கு 'வன்னிமை'களாக நியமனம் பெற்று ஆட்சி அதிகாரம் செலுத்தி வந்தனர். சம்மாந்துறைப் பற்று, கோறளைப் பற்று, கரவாகுப்பற்று ஆகியவற்றில் இத்தகைய இஸ்லாமிய வன்னிமைகள் கடமை புரிந்தனர். தமிழ் வன்னிமைகளை இஸ்லா மியர் மதித்து வந்தது போலவே இஸ்லாமிய வன்னிமைகளை தமிழர்களும் மதித்து வந்தனர். இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் மட்டக்களப்பு இன ஒற்றுமை நன்னிலையில் காணப் பட்டது.

1947 முதலாவது பொதுத் தேர்தலில் கற்குடாத் தொகுதி இஸ்லாமியர் திரு.வி. நல்லையா மாஸ்டர் அவர்களுக்கும் மட்டக்களப்புத் தொகுதித் தமிழ் மக்கள் முதலியார், ஏ.சின்னலெவ்வை அவர்களுக்கும் பட்டிருப்பு தொகுதி இஸ்லாமியர் திரு.எஸ்.யூ. எதிர்மன்னசிங்கம் அவர்களுக்கும் கல்முனை தொகுதி தமிழ் மக்கள் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களுக்கும் இனபேதமின்றி வாக்களித்து வெற்றி பெற வைத்தனர். இந்நிலை இரண்டாவது பாராளுமன்ற காலத்திலும் தொடர்ந்தது. 1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதைத் தொடர்ந்து தந்தை செல்வாவின் தலைமையை ஏற்று மட்டக்களப்பு இஸ்லாமிய வாலிபர் பலர் கிளர்த்தெழுந்தனர். இவ் வாலிபருள் சிலர் இஸ்லாமிய அரசியல் தலைவர்களாக பிற்காலத்தில் திகழ்ந்ததை நாடு நன்கறியும். நிந்தவூர் சட்டத்தரணி எம்.எம்.முஸ்தபா, கல்முனை எம்.ஸி.அகம்மது, மருதமுனை மசூர் மௌலான, காத்தான்குடி பட்டின ஆட்சி மன்றத்தலைவர் ஏ.அகம்மது லெப்பை, புத்தளம் இல்லி யாஸ் என வரிசை நீளும்..

இவ்வாறெல்லாம் பல்வேறு துறைகளிலும் மட்டக்களப்பில் தமிழர் - இஸ்லாமியர் ஒற்றுமை நிலைத்து வளர்ந்து வந்தது. பிற்பட்ட காலத்தில் இந்த மேன்மைமிகு ஒற்றுமைக்கு ஏற்பட்ட கதி என்ன? இவ்வொற்றுமை சீர்குலையக் காரணம் என்ன? இதற்குரிய பொறுப்பாளர்கள் யார்? இவற்றுக் கெல்லாம் தக்க பதில் காண்பதும், குறைகள் தீர்வதற்கு வேண்டிய பரிகாரம் தேடுவதும் நம் மக்களை எதிர்நோக்கியிருக்கும் பெரும் பணியாகும்.

❖❖❖

---

### இன உறவு வலுப்பெற நல்லாசி!

*கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களும், முஸ்லிம்களும் ஒரே வயிற்றுப் பிள்ளைகள் போல இணைந்தும், பிணைந்தும் காலாகாலமாக வாழ்ந்து வருகின்றனர். இரண்டு இனத்தினரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நேசித்து இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு வாழ்கின்றனர்.*

*இடைக்காலத்தில் ஏற்பட்ட சில சம்பவங்கள் இரண்டு இனங்களுக்குமிடையில் சிறிது விரிசலை ஏற்படுத்தினாலும் - அவ்வினங்களைச் சேர்ந்த சமயப் பெரியார்களும், தலைவர்களும் மேற்கொண்ட பெருமுயற்சியினால் நமது பகுதியில் மீண்டும் இன நல்லுறவு வலுப்பெற்றுள்ளது.*

*எல்லா உயிர்களையும் நேசித்து அன்பு காட்ட வேண்டுமென்று இஸ்லாம் வலியுறுத்துகின்றது. முஸ்லிம்கள் பிற மதத்தவர்களுடன் நேசமாகப் பழக வேண்டுமென்றும் அது அறிவுறுத்துகிறது. அண்டை அயலாருக்கு உதவி உபகாரம் புரிந்து அவர்களைப் பேணி வாழவேண்டுமென்று போதிக்கும் இஸ்லாம் அயலில் வாழும் முஸ்லிம் அல்லாதவரையும் அரவணைத்து அவர்களுக்கு உதவி புரிய வேண்டுமென்று பணிக்கின்றது.*

*எனவே, நமது பகுதியில் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு மீண்டும் மீண்டும் வலுப்பெறுவதற்கு ஆவன செய்வது அனைவரதும் கடமையாகும். இது ஒரு சமயப் பணியுமாகும். இந்த வகையில் 'தினக்கதிர்' ப் பத்திரிகை இன நல்லுறவு தொடர்பாக சிறப்பு மலரொன்றைப் பிரசுரிப்பது பாராட்டத் தக்கதாகும். இது இரு இனங்களுக்கிடையிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு சிறந்த முயற்சியாகும். இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதில் பத்திரிகைகளின் பங்களிப்பு மிகப் பிரதானமானது. இப்பங்களிப்பை மிகச் சிறப்பாகச் செய்யும் 'தினக்கதிரைப் பாராட்டி அதற்கு எனது நல்லாசிகளை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.*

**எம்.ஏ. முஹம்மது அப்துல்லாஹ் ஆலிம்**

**(அதிபர்.ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி, காத்தான்குடி.)**

# சகோதரத்துவ சிறப்பிதழ்

## 'இஸ்லாம் எங்கள் வழி - இன்பத்தமிழ் எங்கள் மொழி'

### -இருதயத்தின் ஈரிதழ்போல் தமிழ் முஸ்லிம் உறவு-

முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும், உள்ள உறவு பல நூற்றாண்டு காலமாக கலாசசார, பண்பாட்டு ரீதியாகப் பின்னிப் பிணைந்ததாகும். பருவப் பெயர்ச்சிக்குக் காற்றைப் பயன்படுத்தி வர்த்தகத்தில் பெயர்பெற்றிருந்த "கஹ்தான்" வர்க்க அரேபியர்களின் பாய்மரக் கப்பலொன்று புயலிலே சிக்கி கரை தட்டிய போது அவ்வரேபிய முஸ்லிம்களை இங்குள்ள முற்குகர்கள் ஆதரித்து அவர்களுக்கு உதவி செய்து உபசரித்தனர். இவர்களுக்கிடையே ஏற்பட்ட தொடர்பு, இவர்களின் பரஸ்பர உதவியின் நன்றியாக தமது குலப் பெண்களையே திருணம் செய்து கொடுத்தனர் என்று வரலாறு வாயிலாக அறிகின்றோம். இதன் காரணமாகவே முற்குகர்களுக்கிடையேயுள்ள தாய் வழி ரீதியாகப் பின்பற்றப்படும் குடிமுறைத் தொடர்பு முஸ்லிம்களுக்குள்ளேயும் தாய் வழி ரீதியாக இன்றும் நிலவுவதைப் பார்க்கலாம். உதாரணமாக மாந்திறாகுடி, ஓடாவிகுடி, நெய்னாஓடாகுடி, சம்மானொட்டிகுடி, காளிஞ்சா குடி, உகப்போடி குடி, சாயக்காறன் குடி, மரைக்காரலங்காரக் குடி, கச்சினா குடி என்றவாறு உள்ளன. இதே போல் இந்திய தமிழ் முஸ்லிம்களும் இங்கு வியாபார சமய நோக்கங்களுக்காக வந்து இங்குள்ள தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்ததன் மூலம் கொச்சிக்குடி, ஆலிம்குடி, வடக்கனாகுடி, லெப்பை குடி, போன்ற குடி முறைகளும், இந்திய சிப்பாய்க்கலகத்தின் காரணமாக மலையாளக் கரையிலிருந்து வந்து குடியேறிய முஸ்லிம்கள் காரணமாக முந்திரிகைக்கொட்டைக்குடி, வல்லேவலிக்குடி, மலையாளத்தான் குடி..... போன்ற குடிமுறைகளும், உள்ளன. இதனால் அரபிய முஸ்லிம்களின் சமய கலாசாரப்பாரம்பரியங்களும், இந்திய முஸ்லிம்களின் கலாசாரப் பாரம்பரியங்களும் இப்பகுதி தமிழ், முற்குக கலாசாரப் பாரம்பரியங்களும் இப்பகுதி முஸ்லிம்கள் வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளன. கோயில் திருவிழாவின் போது ஒவ்வொரு குடி முறையினரும் தமது கோயில் திரு விழா நாளைச் சிறப்பிப்பது போல இப்பகுதி முஸ்லிம்களும் தமது பள்ளிவாசல்களில் இதை நினைவுபடுத்துகின்றனர். உதாரணமாக முதல்.முஸ்லிம் குடியேற்றம் நடந்த காத்தான்குடியில் முதல் ஜும்மா பள்ளி வாசலான "ஜாமியுழ்ழாபிரீன் பெரிய மீரா ஜும்மா பள்ளிவாசலில் 12 நாட்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மௌலீது ஓதி பள்ளிவாசலைச் சிறப்பித்து அக்குடியினரால் அன்னதானம் வழங்கப்படும் நிகழ்ச்சி இன்றும் நிலவி வருகிறது.

இப்பகுதி முஸ்லிம்களின் தாய்வழித்தொடர்பு தமிழ் முற்குக வழிமுறையினதே என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை. கொச்சிம்மா, வெள்ளம்மா, தங்கம்மா, சின்னக்கிளி, அழகம்மா,.... சின்னத்தம்பி, ராசாத்தம்பி, வெள்ளத்தம்பி போன்ற பெயர்கள் முஸ்லிம்களிடையே இருப்பதுவும் தமிழ் முஸ்லிம் தொடர்பை சுட்டிக்காட்டுகின்றன. ஆரம்ப காலத்தில் முஸ்லிம்களுக்கும், முற்குகர்களுக்கும் இருந்த நெருக்கமான தொடர்பு காரணமாகவே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த உட்சவத்தின் போது தேர் வடம் பிடித்து ஆரம்பிக்கும் வைபவத்தில் முஸ்லிம் குடி முறையினரும் கலந்து வடம் பிடித்துத் தொடங்கி வைக்கும் கௌரவம் கொடுக்கப்பட்டு வந்தது வரலாறு மறக்கமுடியாத உண்மையாகும். இதே போல் கோயில்களில் மடை வைக்கும் போது "பட்டாணியர்" மடை வைத்து (இங்கு பட்டர்ணியர் என்பது "பதன்ஸ்" என்ற பகுதியில் இருந்து வியாபாரத்திற்கு வந்து குடியேறிய முஸ்லிம்களைக் குறிக்கின்றது.) கௌரவிப்பதும், சவக்குழி ஏலம் விடும் போது....

"பித்தா பிறை சூடி பெருமானே போற்றி..... என்று தொடங்கி இறுதியில் முற்குகர்களைக் காத்த பட்டாணியர்கள் போற்றி.....என்று முடிவதும், இப்பகுதிச் சில கோயில்களில் துலுக்கர்சிலை (இதுவும் முஸ்லிம்களைக் குறிக்கின்றது) வைத்து இருப்பதும் தமிழ் முஸ்லிம் உறவையும், கௌரவத்தையும் நினைவுபடுத்துவதாக அமைகின்றது.

மட்டக்களப்புத் தமிழகத்தின் முதுபெரும் புலவரும் தீர்க்கதரிசிக் கவிஞ்ஞருமான புலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்கள் தமிழ் முஸ்லிம் தொடர்புபற்றி குறிப்பிடும் போது தமது கவிதைத் தொகுதியில்:-

**"இருதயத்தின் ஈரிதழ்போல் இங்கு**
**இந்து முஸ்லிம்**
**ஒரு வயிற்றுப் பாலகர்**
**போலுள்ளோம் - அரசியலில்**
**பேராசைகொண்டோர் பிரித்து**
**நமை வேறாக்கி**
**ஆராயார் செய்வார் அழிவு"**

என்று குறிப்பிடும் பாடல் எக்காலத்திற்கும் ஏற்றதாக எவ்வளவு ஆழமான கருத்துக்களை உள்ளடக்கியது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இவரது "உள்ளதும் நல்லதும்" என்ற நூலில் இருந்து இவர் முஸ்லிம் அறிஞர்கள், அரசியல் வாதிகள், அதிகாரிகள் என்போருடன் கொண்ட ஆழமான தொடர்பை நாம் அறிந்து கொள்ளலாம். முஸ்லிம்களின் முதுபெரும் அறிஞர் முதல் சிவில்சேவண்ட் எ.எம்.ஏ. அஸீஸ், அன்பர் பூபதிதாசர், பொலிஸ் அத்தியட்சகர் நூர்தீன், கல்விப்பணிப்பாளர் சமீம், டாக்டர் உவைஸ், எம்.எஸ்.காரியப்பர் ஆகியோருடன் இவர் கொண்ட தொடர்பும் நட்பும் முஸ்லிம் தமிழ் உறவுக்குப் பெரிதும் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை என்ற புகழ் பெற்ற இவர் தமது ஆழமான நட்புக்கு ஆதாரமாக நண்பர் புலவர் ஷரிபுத்தீன் அவர்களுக்குத் தமது பட்டத்தையே இனிது அளித்து இன்பம் பெற்றது காலத்தால் மறக்க கூடியதல்ல.

மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் பேரவை, மட்டக்களப்பு மவாட்ட கலாசாரப் பேரவை ஆகியவற்றின் உறுப்பினராக இருந்து அருஞ் சேவையாற்றி முஸ்லிம்களின் "களிக்கம்பு"க் கோலாட்டத்தை உயிருட்டிய குழந்தைக் கவிஞர் நாகூர் ஏ பாவா அவர்கள் தமிழ் முஸ்லிம் உறவில் மிக நெருக்கமான பற்றும், உடை ரீதியான ஒற்றுமையையும் பேணுபவராக இருந்தார். இவர் தமது கவிதைத் தொகுதியில்

**"மட்டக்களப்பும் மாண்புற்ற**
**முஸ்லீமும்**
**ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் -**
**பிட்டுப்போல்**
**சிந்தை மகிழும் சிங்காரத் தீப**
**ஒளி**
**இந்து முஸ்லிம் ஒற்றுமையே**
**ஈது....."**

என்பன போன்ற பல்வேறு ஆழமான கவிதைகள் தமிழ், முஸ்லிம் உறவுக்கு உரம் ஊட்டுவதாக அமைந்துள்ளன.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று சகல மக்களையும் ஒன்று போல் நேசித்தவர்.

இவர் மட்டக்களப்பு நகரிலே சிவானந்தா வித்தியாலயத்தை அமையாது காடும், சுடலையும் அமைந்த கல்லடியில் ஏன் அமைத்தார் என்பதற்கு அவர் விளக்கம் கொடுக்கும் போது இவ்வித்தியாலயத்தில் தமிழ் மாணவர்களுடன் முஸ்லிம் மாணவர்களும் சேர்ந்து படிக்க வேண்டும். கல்லடிக்கு அண்மையிலுள்ள காத்தான்குடி முஸ்லிம் மக்கள் அதில் பிரயோசனம் பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் பேரிலாகும். இவர் சிவானந்த வித்தியாலயத்தை அமைக்கும் பணியில் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு காத்தான்குடி மரைக்காயமார்களான அ.ம.சின்னலெப்பை மரைக்கார், அப்துல் கரீம் உடையார் என்பவர்கள் பக்கபலமாக நின்று உதவினார்கள் என அறிகின்றோம்.

கல்முனைப் பிரதேசத்தின் முதல் பட்டதாரியும், அமைச்சருமான அல்ஹாஜ். அப்துல் மஜீது சிவானந்தா வித்தியாலயப் பொன்விழாவில் கலந்து சிறப்புரையாற்றும் போது "நான் இக்கல்லூரியில் 12 வயது பையனாக இருந்த போது என்னுடன் சேர்த்து பொத்துவில் தொடக்கம் புல்மோட்டை வரையிலுள்ள 27 முஸ்லிம் மாணவர்கள் இருந்தார்கள். சுவாமி விபுலானந்தர் அவர்கள் நள்ளிரவில் எங்களை எழுப்பி, இது முஸ்லிம்கள் நோன்பு நோற்க வேண்டிய மாதம். நீங்கள் எல்லோரும் உணவருந்தி நோன்பு நோற்க வேண்டும்" என்று கூறி அதற்கான விதிமுறைகளையும் கூறி எங்களை நோன்பு நோற்கச் செய்தார். எனவே நான் முதன் முதல் நோன்பு நோற்க இங்கேயே சுவாமி அவர்களால் பழக்கப்பட்டேன் என்று கூறினார்.

இதே போலத் தான் சுவாமி அவர்களின் மற்றொரு மாணாக்கரான முதல் முஸ்லிம் சிவில் சேர்வண்ட, கொழும்பு சாஹிறாக் கல்லூரி அதிபர் அறிஞர் எ.எம்.எ.அஸீஸ் அவர்கள் தமது நூலில் 'சுவாமி அவர்கள் சாதி, சமய வேறுபாடின்றி, அரசியல் கட்சிப் பிரிவின்றி அனைத்து சமூகங்களுக்கும் சேவை செய்தவர். நான் யாழ்ப்பாண வைதீஸ்வரா வித்தியாலயத்தில் சுவாமி அவர்களின் கல்லூரியில் மாணவராயிருக்கும் போது அவர் அக்கல்லூரியில் அரபு, இஸ்லாம் படிப்பிக்க ஒரு மௌலவி ஆசிரியரையும், சிங்கள, பௌத்த கலாசாரம் படிப்பிக்க ஒரு பௌத்த துறவியையும் ஆசிரியராக 1937 - 1941 களில் நியமித்திருந்தார்' என்று குறிப்பிடுகின்றார். தான் கல்முனை உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் போது தனக்கும் சுவாமி அவர்களுக்குமிடையே இருந்த தொடர்பு எனது மூத்த சகோதரனைப் போல் இருந்தது.

சிவானந்தா சாலையில் சகல, மத இன மாணவர்களும் ஒன்றாகக் கலந்து அனைத்து சமய விழாக்களையும் மன மகிழ்ச்சியுடன் கொண்டாடுவது, அப்போதைய ஆசிரியர்களான தியாகராச (வகிமா செயலாளராக இருந்து ஓய்வு பெற்றவர்), கணபதிப்பிள்ளை, பண்டிதர் வீ.சீ.கந்தையா, வியாகரண சிரோன்மணி தியாகராஜா ஐயர் ஆகியோர்களை இன்றும் நினைவு கூருகின்றோம். தியாகராசா சேர் அவர்கள் அனைத்து மாணவர்களையும் "மகன்" என்ற வார்த்தையாலேயே அழைப்பார். அவரது வீட்டுக்கு எனது வலதுபக்க நண்பன் ராதாகிருஷ்ணன்,(இந்து மாணவர்) இடது பக்க நண்பன் சந்.அரியரெத்தினம்(கிறிஸ்தவ மாணவன்) சென்று நாங்களே வீட்டு சமையலறைக்குள் சென்று நெல்லி ரசத்தை ஊற்றிக் குடிப்போம். இரவு 8-9 மணி வரை அங்கிருந்து படித்து விட்டு வீடு வருவோம். எமது வீட்டுக்கு வந்து கலந்துரையாடும் இவ்விரு மாணவர்களும் மாற்று மதத்த வர்கள் என்ற உண்மை ஒரு வருடத்தின் பின்பு தான் எனது தந்தைக்கே தெரிந்தது. தியாக ராஜா ஐயர் அவர்கள் 5 மாதத்திற்கிடையிலேயே - அரிச்சுவடி கூட தெரியாத எனக்கு ஏ.எல். வகுப்பில் வைத்தும், வீட்டுக்கு அழைத்தும் ஒரு சதமும் டியுசன் பணம் பெறாது (டியூசன் கலாசாரம் அன்று இல்லை) சமஸ்கிருதப் பாடத்தில் திறமை சித்தி பெறும் அளவிற்குப் படிப்பித்த உறவை நினைத்துப் பார்க்கின்றேன்.

இவ்வாறான ஒரு தொடர்பும் மாணவர்களுக்கிடையேயுள்ள புரிந்துணர்வும் எமது சந்ததிகளுக்கு, இக்கால மாணவர்களுக்குக் கிடையாது மொழி, சமய ரீதியாகப் பாடசாலைகள் பிரிந்து விட்டதே என எண்ணிப் பார்க்கும் போது புலவர் மணியின் கவிதை கூறும் கருத்தே சிந்தனைக்கு வருகின்றது.

பல்வேறு காலகட்டங்களில் இன ரீதியான சில குழப்பங்கள் புரிந்துணர்வு இல்லாத சில புல்லுருவிகளால் ஏற்பட்டாலும் அது புத்தி ஜீவிகளுக்கு மத்தியில் எந்த விரிசலையும் கடந்த காலத்தில் ஏற்படுத்தவில்லை. தமிழ் மக்களின் உயிர் உடமைகளை முஸ்லிம்களும், முஸ்லிம்களின் உயிர் உடைமைகளை தமிழ் மக்களும் காப்பாற்றிக்கொடுத்த பல சம்பவங்கள் எம் கண்முன்னே வருகின்றன. எது எப்படி நடந்தாலும் அரிசி விற்கும் அவ்வாக்கண்டுக்கும், அதைக் கொடுக்கும் அமராவதிக்கும் ஒரு போதும் உரசல் வருவதில்லை. படுவான் கரையில் பாய்கொண்டு விற்கும் பாய்மாமாவிற்கும், அதற்குப் பகரமாக நெல்லைக்கொடுக்கும் நல்லதம்பிக்கும் ஒருபோதும் சண்டை வருவதில்லை. தமது கடையில் வாடிக்கையாளராக இருக்கும் வடிவேலுக்கும் அதை விற்கும் வரிசை முஹம்மதுக்கும் ஒரு போதும் விரிசல் ஏற்படுவதில்லை.ஏனென்றால் இவர்களிடையேயுள்ள இறுக்கமான நட்பும், உறவும் இவர்களுக்குள்ளே ஒரு பரஸ்பர உறவை ஏற்படுத்தியுள்ளன என்று கூறினால் அது மிகையாகாது

மேற்கூறிய விடயங்கள் எல்லாம் பழைய கதைதானே என்று ஒதுக்கி விடாது. இன்றுள்ள இரு பகுதியிலுமுள்ள இளைஞ்ஞர் சமூகம் இதைப் பற்றிச் சிந்தித்து இறுக்கமான ஒரு உறவையும் பிணைப்பையும் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். சமய ரீதியாகப் பாடசாலைகள் பிரிந்திருந்தாலும் ஆசிரியர்களும், மாணவர்களும் இவ்விரு பாடசாலைகளிலும் படிக்க, படிப்பிக்க முன்வரவேண்டும். இரு சமூக பெருநாட்களையும் இரு பகுதியினரும் ஒற்றுமையாக சகோதர மனப்பான்மையுடன் நினைவு கூர ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். இரு சமூக மாணவர்களும், ஆசிரியர்களும், பங்கு பற்றக் கூடியதான கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் ஏற்படுத்த வேண்டும். இரு சமூக நன்மை தீமைகளில் சுக, துக்கங்களில் பரஸ்பர எண்ணத்துடன் சென்று வரும் நிலமைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். சமய, கலாசார, இலக்கிய விழாக்களில் இரு பகுதியினரும் கலந்து மேலும் உறவை வளர்ப்பதற்கான காள்கோல்கள் அமைக்கப்பட வேண்டும்.

□□□

**அல்ஹாஜ்.எம்.எம்.எம்.மஹ்றூப் கரீம்.**
**அதிபர்.மீரா பாலிகா வித்தியாலயம்**
**காத்தான்குடி**

## குருவின் ஆசி



உலகை எல்லாம் ஆக்கி அழிப்பவர் எல்லாம் கடவுளே ஆவார். அவர் எல்லையற்ற ஆற்றலால் உலகை அனைத்தையும் ஆண்டு வருகிறார். விறகில் தீ மறைந்திருப்பது போல் எங்கும் நிறைந்தருளுகின்றார். இறைவனின் அவதாரமாக கருதப்படும் முருகப் பெருமான் உலகில் உள்ள ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின்றும் விடுபட்டு கடவுள் சிந்தனையுடன் இருக்க வேண்டும்.

இதன் பொருட்டு இப் புனித வைகாசி விசாக தினத்திலே உயிர்கள் அனைத்தும் உய்யும் வண்ணம்

"அருவமு முருவுமாகி அநாதியாப் பலவாயொன்றாய்ப்ப
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்து அங்கு உதித்தனன் உலகம் உய்ய"

ஆகவே இப் புனித தினத்திலே பௌத்த மக்களும் தங்களுடைய இறைவனை, இஸ்லாம் மக்கள் தங்கள் இறைவனை இப்புனித தினத்திலே வழிபாடு செய்து சாந்தி சமாதானத்துடன் நாட்டிலே எல்லா மக்களும் சகோதர உணர்வுடன் ஒற்றுமையாக வாழ இறைவனை பிராத்திப்போமாக.

இத் தினத்திலே உங்கள் கையிலே தவழுகின்ற தினக்கதிரை தூக்கி அணைப்பது எல்லோருடைய கடமையாகும். ஆகவே இதன் ஆசிரியர் நிர்வாக குழுவினர் மேலும் மேலும் இத்தினக்கதிரை சிறப்பாக வெளிவர எல்லாம் வல்ல மாமாங்கேஸ்வரரை பிராத்தித்து ஆசி கூறுகிறோம்.

**இன்பமே சூழ்க**
**எல்லோரும் வாழ்க**

**மஹாராஜஸ்ரீ பூர்ண சந்திரானந்த குருக்கள்.**
*பிரதம குரு.ஸ்ரீ மாமாங்கபிள்ளையார் தேவஸ்தானம்*
*அமிர்தகழி மட்டக்களப்பு*

# சுற்று நிருபங்களும் சட்டதிட்டங்களும் ஒழுக்கமான சமுதாயத்தைத் தோற்றுவிக்காது

**-சம்மாந்துறையில் பிரதி கல்வியமைச்சர்-**

## கல்வியின் நோக்கத்தை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்

(காரைதீவு நிருபர்)

"அன்றைய மாணவரிடம் காணப்பட்ட ஒழுக்கம், பண்பாடு, மனிதநேயம் என்பன இன்றைய மாணவரிடம் குறைவடைந்து வருகிறது. அதற்குக் காரணம் ஆசிரியர் மாணவரிடையிலான உறவின் தன்மை பாதிக்கப்பட்டிருப்பதே.

இவ்வாறு பிரதிக்கல்வியமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

வலயக்கல்விப் பணிப்பாளர் ஐ.எம்.இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பு வைபவத்தில் பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.எல்.ஏ.சலாம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அங்கு அதாவுல்லா பேசுகையில்:-

"கல்வித்திணைக்களத்திலுள்ள நாங்கள் எல்லாம் இணைந்து எதிர்காலத்தில் மனித சமுதாயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனித நேயமுள்ள மாணவர் சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

ஆசிரியருக்கு கைநீட்டி அடிக்கின்ற மாணவனும், ஆசிரியரைத் திட்டுகின்ற மாணவனும், ஆசிரியருக்கு மரியாதை செய்யாத மாணவனும் இன்றைய கல்வி உலகில் உருவாகி வருவதற்கான காரணம் என்ன?

ஆசிரியர் சமூகத்தில் அல்லது கல்வி அதிகாரிகள் சமூகத்தில் ஏதோ குறைபாடு இருப்பது போன்று தோன்றுகிறது. மனிதரை இறைவன் குறைபாடுள்ள ஜென்மமாக படைக்கவில்லை. ஒவ்வொருவரிடமும் வித்தியாசம் வித்தியாசமான திறமைகளிருப்பதை நீவீர் அறிவீர்கள்.

### ௯0% பேர் வீதியில்

நமது நாட்டு கல்வியில் திறமையை வெளிக்கொண்டு வர எந்த நடைமுறையும் இல்லாதுள்ளது. 10 பேர் பல்கலைக்கழகம் செல்ல 90 பேர் வீதியில் அலைய வேண்டிய நிலையுள்ளது. இயற்கையாக உள்ள திறமைகளை பாவிக்க முடியாத துரதிஷ்ட நிலை இலங்கை கல்வியில் காணப்படுகிது.

வெளிநாட்டில் பார்க்கின்ற போது மாணவனின் திறமைக்கேற்ப கல்விப்போதனை வழங்கப்படுகிறது.

கல்வி என்றால் என்ன என்று தெரியாத நிலையில் இருந்து உலகில் போர்க்கால சூழ்நிலை தலைவிரித்தாடுகிறது. கல்வி என்பது உத்தியோகம் பார்ப்பதற்கு என்ற நிலையே பெரும்பாலும் காணப்படுகிறது.

### கற்றவர்களே மோசம்.

கல்வி மனிதனை மனிதனாக்கவில்லை என்றால் ஒழுக்கத்தை சீராக்கவில்லை என்றால் மன எழுச்சியைச் சீராக்கவில்லை என்றால் பயன் இல்லை எனலாம்.

இயற்கையாகவுள்ள மனிதத்துவத்தை வெளிக்கொணரக் கல்வி பயன்பட வேண்டும் என்பது எனது கருத்தாகும். கல்வி கற்றவர்கள் தான் இன்று சமுதாயத்தில் சண்டையீட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் வாதியாக இருந்தாலும், நன்கு கல்வி கற்றவர்கள் தான் சண்டையிடுகிறார்கள். நன்கு கல்வி கற்ற ஆசிரியர்கள் தான் வகுப்பறையில் சண்டை பிடிக்கிறார்கள். இதனைப் பார்க்கும் மாணவர்கள் அவர்களுக்கு மதிப்பளிக்கத் தயங்குகிறார்கள்.

கல்வி இலாகாவின் சுற்று நிருபமும், சட்ட திட்டங்களும் ஒழுக்கமான சமுதாயத்தை தோற்றுவிக்கும் என்று எண்ண முடியாது. ஆசிரியரின் மனப் பாங்கு மாற வேண்டும் என்றார்.

### கலாசாரம் வேண்டும்

அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம். மொகைதீன் பேசுகையில்:

"கல்வியானது ஒரு ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்காது போனால் அந்தக் கல்வியால் எந்தப் பிரயோசனமும் இல்லை. நாம் கல்வி கற்ற ஆசிரியர்களை மதித்துச் செல்கின்றோம். இன்று அந்நிலை இல்லை.

ஆசிரியர், அதிபர், அரசியல்வாதி என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கலாசாரம் இருக்க வேண்டும் என்றார்.

இரு எம்.பிக்களுக்கும் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டன. கல்விப் பணிப்பாளர் இஸ்ஸதீன் இயற்றி வடிவமைத்த வாழ்த்துப்பா கவிதையை அவரே வாசித்துக் கையளித்தார்.

மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர் சோ.பாக்கியநாதன் நன்றியுரையாற்றினார்.

# கல்முனைப் பகுதியில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

(பாண்டிருப்பு நிருபர் கேதீஸ்)

கல்முனை பிரதேசத்தின் சில இடங்களில் அண்மைக் காலமாக சட்ட விரோத மது (கசிப்பு) உற்பத்தி நடவடிக்கை அதிகரித்து வருவதை கவனத்தில் கொண்டு கல்முனைத் தமிழ் பிரதேச செயலாளர் ஏ.கே.தவராசா தலைமையிலான சமுர்த்தி விழிப்புக் குழுவினர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களை தேடிக் கண்டு பிடித்து அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கசிப்பு உற்பத்தி செய்யும் பொருட்கள் பல பிரதேச வளாகத்தில் குவிந்து காணப்படுகின்றது.

இந் நடவடிக்கை தொடர்பாக இப்பகுதி மக்கள் கருத்துக் கூறுகையில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையை இடைவிடாது தொடர்ந்தால் மிக விரைவில் முற்றாக கசிப்பு உற்பத்தி நடவடிக்கையை முற்றாக ஒழித்து விடலாம் எனத் தினக்க திருக்குத் தெரிவித்தனர்.

# அம்பாறை நகரில் சிறுகைத்தொழில் பேட்டை

(அக்கரைப்பற்று நிருபர்)

அம்பாறை நகரின் எல்லைப்புறப்பகுதியில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுகைத்தொழில் பேட்டை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு கைத்தொழில் அபிவிருத்திச்சபை மூலம் உள்ளூர் முதலீட்டாளர்களைக் கொண்டு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய மூலப்பொருள்களைக் கொண்டு உற்பத்திசெய்யும் தொழில்களுக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறதென்றும், ஈடுபடவிருக்கும் முதலீட்டாளர்களுக்கு வங்கிகள் மூலம் நீண்டகால தவணைகளில் கடன் செலுத்தக்கூடிய கடன் வசதிகளும் அமைச்சினால் செய்து கொடுக்கப்படவிருக்கிறது என்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

இந்த தொழிற்பேட்டை அமையும் இடத்திற்கு போக்குவரத்து வசதிகள், மின்சாரம், குடிநீர், கட்டிட வசதிகள் எல்லாம் கிராமிய கைத்தொழில் அமைச்சினால் செய்து கொடுக்கப்படவிருக்கிறது. இது வரை 25 முதலீட்டாளர்கள் கைத்தொழில் மேற்கொள்வதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள். உடனடியாக பத்து கைத்தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. உள்ளூர் முதலீட்டாளர்கள் இதற்கான ஆரம்ப வேலைகளை மேற்கொண்டு வருகிறார்கள். கருங்கல் உடைக்கும் தொழில், பாதணிகள் உற்பத்தி செய்யும் தொழில், மரவேலைகள் போன்ற கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இந்த மாவட்டத்திலுள்ள இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் தொழில் வசதிகள் இங்கு அளிக்கப்படும். முக்கியமாக சமூர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு முன்னுரிமை கொடுத்து தெரிவு செய்யப்படுவார்கள் என்று கைத்தொழில் அபிவிருத்திச்சபை அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

இதே நேரத்தில் கைத்தொழில் அபிவிருத்திச்சபை பிரதேச மட்டத்தில் சுயமாக சிறுகைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. வெண்கட்டி உற்பத்தி, துணியில் சித்திரம் பதித்தல், நிலக்கடலை, கடலை போன்றவைகள் நவீனமுறையில் பொதி செய்வது போன்ற பயிற்சிகள் கடந்த ஒரு மாதமாக பல பிரிவுகளில் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

# அம்பாறை மாவட்டத்தில் காணி வங்கி அறிமுகம்.

(அக்கரைப்பற்று நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் நெற் செய்கைக்கோ, மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்கோ உத்தரவாதப் பத்திரத்தின் கீழ் காணி அமைச்சினால் வழங்கப்பட்ட காணிகள் பெருமளவு பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது என்று இந்தக் காணிகளை மீளப் பெற்று 'காணி வங்கி' ஒன்று அமைத்து மீண்டும் நெற் செய்கைக்கும், மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்கும் வழங்குவதற்கான ஒரு நடவடிக்கையை காணி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இப்போது இது பற்றி மாவட்டத்திலுள்ள 18 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பயன் படுத்தப்படாது இருக்கும் காணிகளின் விபரங்களும், முடிக்குரிய காணிகளின் விபரங்களும் சேகரிக்கப்பட்டு வருகிறது. பிரதேச செயலகத்தின் நகர் பிரிவுகளை அண்டியுள்ள பிரதேசங்களில் இருக்கும் முடிக்குரிய காணிகள் நில அளவை செய்யப்பட்டு அந்தக் காணிகள் அரசாங்கத் திணைக்களங்களின் எதிர்காலத் தேவைகளுக்காக வைத்திருக்க வேண்டும் என்று காணி அமைச்சின் செயலாளர் பிரதேச செயலாளருக்கு சுற்று நிருபத்தின் மூலம் தெரிவித்தார்.


தற்போது வட கிழக்கில் இருந்து வரும் யுத்த சூழ் நிலையினால்தான் அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த காணிகளும் மேட்டு நிலப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த காணிகளும் உபயோகமில்லாது இருக்கிறது என்று சம்பந்தப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். பொதுவாக மாவட்டத்தின வடக்கு மேற்கு தெற்குப் பகுதிகளின் எல்லைப் புறங்களிலுள்ள தமிழ், முஸ்லீம், சிங்கள மக்களின் காணிகள் உபயோகமில்லாது பற்றைக் காடு கள் வளர்ந்து போய்க் கிடக்கிறது. சில இடங்களில் தமிழ் மக்க ளுக்குச் சொந்தமான நெற் காணிகளில் கடந்த 10 வருடங்களாக சிங்கள மக்கள் அந்தக் காணிகளில் நெற் செய்கை மேற்கொண்டு வருகிறார்கள் என்று சம்பந்தப்பட்ட தமிழ் விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். அந்தக் காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ளும் சிங்கள மக்கள் சம்மந்தப் பட்ட தமிழ் விவசாயிகளைத் தேடிச் சந்தித்து குறைந்த அளவு குத்தகைப் பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நெற் செய்கை மேற்கொண்டுள்ள சிங்கள விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

# கல்முனை மாவட்ட ரோட்டரிக் கூட்டம்

(காரைதீவு நிருபர்)

கல்முனை மாவட்ட ரோட்டரிக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 19ம் திகதி பொத்துவில் உல்லை சியாம் விடுதியில் நடைபெறவுள்ளது.

கழக ஆரம்பத் தலைவர் எஸ்.ரி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு இலங்கை ரோட்டரிக் கழகத் தலைவர் கிறிஸ் ராஜேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிப்பார். கல்முனை மாவட்ட ரோட்டரியன்கள் அங்கு ஒன்று கூடவுள்ளதாக ஜோர்ஜ் தெரிவித்தார்.



**அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் பதிவாளர் கிருபாநந்த தாசன் தலைமையில் சுவடிகள் பாதுகாப்பாளராக கடமையாற்றி கல்முனை நீதிமன்றத்திற்கு மாற்றலாகி செல்லப்பட்ட யூ.எல்.அமீருக்கும், பதிவாளருமாகவிருந்து மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு மாற்றலாகிச் சென்றுள்ள கவிஞர், கே.தர்மகுலராஜாவுக்கும் நீதிமன்ற ஊழியர்கள் அளித்த பிரியுபசாரத்தின் போது நீதிமன்ற நீதிபதி கே.தட்சணாமூர்த்தி பேசுவதைக் காணலாம்.** (படப்பிடிப்பு வீ.பி.சிவப்பிரகாசம்)

# இலவச, புத்தகம், பேனை வழங்கும் வைபவம்.

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தில் வசதி குறைந்த 200 மாணவர்களுக்கு புத்தகம், பேனைகள் வழங்கும் நிகழ்வு 30.05.2001 அன்று நடை பெற்றது.

இந்நிகழ்வுக்கு அதிதிகளாக கல்முனைத் தமிழ் பிரதேச செயலாளர் ஏ.கே.தவராசா மற்றும் சமூர்த்தி முகாமையாளர் இ.மதியமுகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கடந்த வருடம் புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கொடி விற்பனை மூலம் பெற்ற நிதியினைக் கொண்டு சமூர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவினரால் இப்பொருட்கள் வழங்கப்பட்டன.





# ''குங்பூ'' பற்றிய சிறு விளக்கம்

கலைகளிலே சிறந்த கலைதான் இந்த "குங்பூ" கலை. இதை நாம் முறையாகக் கற்றுக் கொள்ள 12 வருடங்கள் தேவைப் படுகின்றன. அதற்கான காரணம் என்னவெனில் இந்த "குங்பூ" கலைகளில் 12 தலைமைப்பிரிவுகள் உள்ளன. இந்த பன்னிரெண்டு தலைமைப்பிரிவினுள் ஒவ்வொரு பிரிவினுலும் பன்னிரெண்டு கிளைப பிரிவுகள் உள்ளன.

அதாவது ஒரு தலைமைப்பிரிவைக் கற்றுக் கொள்ள ஒரு வருடம் முடிவடை கிறது. மாதம் ஒன்றிற்கு கிளைப் பிரிவினுள் ஒரு கலை கற்று முடிப்பதற்கு. மொத்தமாக 144 விளையாட்டுக்கள் உள்ளன. அதாவது எமது சரீரத்தில் எத்தனை நரம்புப் பிணைப்புக்கள் உள்ளதோ அத்தனைக்குமுரிய சிறப்பம்சத்துடன் விளங்குகின்றது இந்தக் "குங்பூ" கலை.

இக் "குங்பூ" கலைக்கு மிருகங்களின் பெயர்கள் சூட்டப்பட்டிருப்து இங்கு பிரதான அம்சமாகும்.

குங்பூ பற்றிய பன்னிரெண்டு தலைமைப்பிரிவுகளின் மாதிரிப் படம் பின்வருமாறு.




தொகுப்பு:-
ச.பிரகாஷ்

## வாசகர் நெஞ்சம்

# கல்முனை பிரதேச செயலகத்தின் அவலம்

கல்முனைப் பிரதேச செயலகம் கல்முனைப் பட்டண த்தின் மத்தியில் அமைந்துள்ளது. போதிய ஆளணியையும் சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய முழுமையான செயலகமாக விளங்குகின்ற போதிலும் இப்பிரதேச மக்களின் உணர்வுகளை மதித்து சேவையாற்றுவதாக இல்லை. பிரதேச செயலாளர் முதல் பல அதிகாரிகள் வரை பெரும்பாலானவர்கள் அரசியல் வாதிகளின் கைப்பொம்மைகள் போன்று செயல்படுகின்றனர். அரசியல் பலத்தின் மூலமே நஷ்ட ஈடு முதல் சகல காரியங்களையும் நிறைவேற்றும் நிலையுள்ளது. மோசடிகள், இலஞ்சம் என்பன சர்வ சாதாரணமான விடயங்கள்.

முஸ்லிம்களின் இலட்சியமாக ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசினால் முன்வைக்கப்படும் கரையோர மாவட்டம் தென்கிழக்கு- அலகு இரண்டினதும் தலைமையகமாக கல்முனை சிறந்த முறையில் நிர்வகிக்கப்படவில்லை என்ற ஆதங்கம் கல்முனை முஸ்லீம்களிடம் காணப்படுவது துரதிஸ்டமாகும்.

செயலக அதிகாரிகள், ஊழியர்கள் மத்தியிலும் விரக்தி நிலை காணப்படுகிறது. சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரங்கொடுக்க மறுத்தாற் போல சிற்றூழியர் ஒருவரின் செயற்பாடு பற்றி பலரும் பேசிக் கொள்கின்றனர். காலை முதல் மாலை வரை இப்பிரதேச செயலகத்தில் பத்திரிகையாளர்கள் அனைவரும் பிரதேச செயலாளரைச் சூழ்ந்து நிற்கின்றனர். ஆனால் குறைபாடுகளை இனங்கண்டு எழுதுவதாக இல்லை. பிரதேச செயலகத்திற்கு 3 தொலைபேசி இணைப்புக்கள் உள்ளன. அனைத்தும் பிரதேச செயலாளரின் பாவனைக்காகவே. நகரசபை கிழக்கிலேயே அதிக வருமானத் தைப் பெறுவதாகும். ஆனால் பிரதேச அபிவிருத்திக்குப் பணம் செலவிடப்படுவதில்லை. இவற்றி லும் பல மோசடிகள் நடந்த வண்ணம் உள்ளன.

பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கடமை புரிகின்றனர். ஆனால் பிரதேச செயலாளருக்கு அடுத்த படியாக வுள்ள இவ்விரு உயர் அதிகாரிகளுக்கும் பதவிப் பொறுப்புக்கள் அளிக்கப்படவில்லை. இருவரும் பெயரளவில் செயற்படுகின்றனர். இடமாற்றங்களை எதிர் பார்த்து வேதனையுடன் பொழுதைப் போக்குகின்றனர். வருடம் தோறும் இலட்சக் கணக்கான ரூபாய்கள் காகிதாதிகளுக்காக ஒதுக்கப்பட்டும் ஊழயர்களுக்குப் போதுமானவை வழங்கப்படுவதில்லை. 3 கணணிகள் இருந்தும் கடிதங்கள் தட்டச்சு மூலமே வழங்கப்படுகின்றன. தனியார் புத்தகங்களை அச்சிடு வதில் 3 கணணிகளும் பயன்படுத்தப்படுகின்றன. எழுத்தாளரான பிரதேச செயலாளர் இவ்விடயத்தில் கவனமெடுப்பாரா? அதிகாரிகளை மதிக்காமல் செயற்படும் சம்பந்தப்பட்ட சிற்றூழியரை 12 வருடங்களாக இடமாற்றம் செய்யாமல் கிடைத்த இடமாற்றங்களை இரத்துச் செய்வதன் நோக்கங்கள் புரிவதாக இல்லை.

கட்டிட கொந்தராத்துக்கள் மற்றும் புனரமைப்பு செயற்பாடு களினால் பாரபட்சம் காட்டப்படுவதாக மக்கள் குறை கூறுகின்றனர். இப்பிரதேச செயலகம் அசமந்த சுயநலமிக்க செயற்பாடு களையிட்டு முஸ்லீம் மக்கள் விழித்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் மேலும் மேலும் ஏழைகளும் அரசியற் பலமற்றவர்களுமே துன்பக்கடலில் மூழ்குவது திண்ணம்.

**ஏ.ஏ.கபூர்**
**நற்பிட்டிமுனை-04**
**கல்முனை.**

# எமக்கு எப்போது நேர்முகப்பரீட்சை

மனித வலு முகவர் நிலையத்திற்கு இளைஞர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டு இருந்தது மண்முனைப்பற்று பிரதேச செயலகத்திற்கு இது சம்பந்தமான கடிதம் 14-05-2001 அன்று வந்து சேர்ந்து பிரதேச செயலாளரினால் கிராம சேவை உத்தியோகஸ்தர்களுக்கு 22-05-2001 அன்றே மேற்படி வேலைகளுக்கான விண்ணப்பத்தினை சேகரித்து 23-05-2001 புதன்கிழமை ஒப்படைக்கும்படி அறிவுறுத்தியிருந்தனர் அதன் படி புதன் கிழமை காலையில் ஒப்படைத்தோம். மாவட்ட செயலகத்தில் அன்றே 12 மணிக்கு அனுப்பும்படி கோரியிருந்தனர் பிரதேச செயலகத்தினால் மாவட்ட செயலகத்தில் பிற்பகல் 3 மணிக்கு ஒப்படைக்கப்பட்டதால் மேற்படி மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தால் ஒப்படைக்கப்பட்ட விண்ணப்பம் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுள்ளது

பிரதேச செயலகத்தில் கூறியவாறு அன்றைய தினம் நேர்முகப் பரீட்சைக்கு சென்ற எங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட காரணத்தினால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் அவல நிலை ஏப்பட்டது இந் நிலைக்கு காரணம் பிரதேச செயலாளரின் கவலையீனமாகும் இந் நிலையினால் விண்ணப்பதாரிகளான நாங்கள்பாதிக்கப்பட்டுள்ளோம் எங்களது கஷ்ட நிலையினைக் கருத்தில் கொண்டு வேறோர் தினத்தில் எங்களை நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் படி தினக்கதிர் ஊடாகக் கேட்டுக் கொள்கிறோம்.

**எஸ்.கனேசதாஸ்.மட்டக்களப்பு**

# அதிகாரப் பரவலாக்கல் ஒருபுறம் அதிகாரப் பறிப்பு மறுபுறம்!

(நமது நிருபர்)

**மாநகர சபைகள் உள்ளிட்ட உளளுராட்சி சபைகளின் அதிகாரத்தை மத்திய அரசின் கீழ் கொண்டுவருவதற்கு சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு மாநகர முதல்வர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.**

## மேயர்கள் எதிர்ப்பு

கொழும்பு நகரின் அபிவிருத்தியில் இளைஞர் விவகார நகர அபிவிருத்தி அமைச்சு சில நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன் படிப்படியாக உள்ளூராட்சி சபைகளின் நிருவாகத்தை மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதற்கும் தற்போது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

இந்த பிரச்சினையை நியாயமான முறையில் தீர்க்க வேண்டுமென சிறிலங்கா ஜனாதிபதியைச் சந்தித்துக் கேட்டுக் கொள்வதென மேயர்கள் சம்மேளனம் நேற்று (3.6.2001) கொழும்பில் நடத்திய கூட்டத்தில் தீர்மானம் எடுத்துள்ளது.

சிறிலங்காவின் அரசியல் யாப்பு அதிகாரப் பரவலாக்கத்திற்கே முன்னுரிமை வழங்குவதால் நகர அபிவிருத்திச் சட்டங்களை ஆதாரமாகக் காட்டி இம்முயற்சிகள் சட்டத்திற்கு முரணானது எனவும் இச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இக்கூட்டத்தில் கொழும்பு, கோட்டை, கண்டி, மொறட்டுவை, மாத்தளை, குருணாகல், யாழ்ப்பாணம் ஆகிய மாநகர சபை களின் மேயர்கள் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த யாழ். மேயர் என்.ரவிராஜ் கூறுகையில்: 'இன்று எத்தனையோ தியாகங்களுக்கு மத்தியில் விடுதலைப்புலிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இப்போராட்டம் தனியான அதிகாரங்களை உள்ளடக்கிய தமது தாயகத்தைப் பெற்றுக்கொள்வதற்கேயாகும். இதுவும் ஒரு அதிகாரப் பரவலாக்கமேயாகும். இந்த நிலையில் நகர சபைகளின் அதிகாரங்களை சிறிலங்கா அரசு மத்திய அரசின் கீழ் கொண்டுவர எடுக்கும் முயற்சி இத்தியாகங்களை ஒதுக்கும் ஒரு செயலாகும்.

இன்று வடக்குக் கிழக்கைப் பொறுத்த வரை எத்தனையோ அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையில் அபிவிருத்தி வேலைகளைப் பற்றிச் சிந்திக்காது அதிகாரப் பரவலாக்கத்தை குறைக்கவே அரசு முனைகின்றது.

யாழ்ப்பாணத்தை பொறுத்த அனைத்து அதிகாரங்களையும் ஈ.பி.டி.பியினர் தமது கைக்குள் கொண்டுவர முயற்சி செய்து வருகின்றனர். இந்த நிலையில் சிறிலங்கா இவ்வாறானதொரு முடிவை எடுக்குமானால் அது அவர்களுக்குச் சாதகமாகவே அமையும். இன்று யாழ்பாணத்தில் மாநகர சபைக்கென கட்டிட வசதிகள் கிடையாது. மாநகர சபையின் களஞ்சிய அறையிலேயே மாநகர சபை அலுவலகம் இயங்கி வருகின்றது. சபைக்கென கட்டிடமோ மேயருக்கு அலுவலகமோ சபைக் கூட்டம் நடத்துவதற்குரிய வசதிகளோ அற்ற நிலையிலேயே இன்று நாம் எமது பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்' என்றார்.

## யாழில் 5வயதுக்குக்குட்பட்டவர்கள் போஷாக்கின்மையால் பாதிப்பு!

(யாழ் நிருபர்)

யாழ் மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளில் 20 சத வீதமானவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் பல்கலைக்கழக மருத்துவப் பீட சமூகவியல் துறைத் தலைவர் எம்.சிவராசா தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் முன்னர் செயற்பட்டு வந்த போஷாக்கு உணவூட்டும் நிலையங்கள் வெற்றிகரமாக இயங்கவில்லை எனவும் இதனால் பிள்ளைகள் மத்தியில் போசாக்கு விடயத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே யாழ் மாவட்டத்தில் இனிவரும் காலங்களில் சிறந்த சத்துணவுத் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## திருகோணமலையில் படையினர் பாதுகாப்பைப் பலப்படுத்துகின்றன

(திருமலை)

திருகோணமலை பிரட்ரிக் கோட்டைக்கு மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து செல்லும் கோணேஸ்வரம் வீதியின் இரு பக்கங்களிலும் உள்ள பற்றைகளையும் புதர்களையும் புல்டோஸர் பாவித்து துப்பரவு செய்யும் வேலையில் இராணுவத்தினர் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை தொடக்கம் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பிரட்ரிக் கோட்டைக்குள் இராணுவத்தின் கஜபா றெஜிமென்ட் நிலைகொண்டிருக்கிறது

கோணேஸ்வரம் வீதியின் முற்றவெளிப்பக்கம் காணப்பட்ட புதர்களே புல்டோஸர் மூலம் அகற்றப்பட்டது. துப்பரவு செய்யப்பட்ட சமயம் அந்த இடத்தில் இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது.

இதேபோன்று திருகோணமலை மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் உள்ள கடற்படை மற்றும் இராணுவ முகாம்களுக்குச் செல்லும் வீதிகளும் துப்பரவு செய்யப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கடற்படை மற்றும் இராணுவ முகாம்கள் மீது திடீர்த் தாக்குதல் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாகக் கிடைத்த தகவல்களை அடுத்தே படை முகாம்களைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் மற்றும் வீதிகள் துப்ப ரவு செய்யப்பட்டு பாதுகாப்பு பல ப்படுத்தப்பட்டு வருவதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## இலங்கை....

விக்கிரசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

பிரச்சினை தொடர்பான தற்போதைய நிலை பற்றியும் இந்தியப் பிரதமருடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் பற்றியும் ரணில் விக்கிரம சிங்க முதல்வர் ஜெயலலிதாவுக்கு விளக்கி கூறியதாகவும் ஐக்கிய தேசிய கட்சி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய இலங்கையின் கீழ் சமாதானத் தீர்வு காணப் பட வேண்டும் என்ற கொள்கை யில் இந்திய மத்தியரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் உறுதியாக உள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அத்துடன் தொடரும் யுத்தத்தால் அறுபத்தெட்டாயிரம் உறுப்பினர்கள் பலியானதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என தமிழ் நாடு முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வருடந்தோறும் 24,000 பேர் சிறைச்சாலையில் தடுத்து வைப்பு!

(கொழும்பு நிருபர்)

நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்கள் காரணமாக வருடந்தோறும் இருபத்து நான்காயிரம் பேர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படுவதாக இலங்கைப் பொலிஸ் தலைமையகத்தின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் போதை வஸ்து, கசிப்புத் தொடர்பான குற்றம் புரிந்தே நீதிமன்றங்களின் மூலம் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

கொலை, கொலை முயற்சி, கொள்ளை, கடத்தல், வழிப்பறி, மோசடி, பாலியல் போன்ற சம்பவங்களாலும் சிலர் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளனர். போதைப் பொருள் குற்றச் சாட்டுத் தொடர்பாக வருடந்தோறும் 8,000 பேரும், கசிப்புக்குற்றம் தொடர்பாக 6000 பேரும் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். இவர்களில் 20 சதவீதமானவர்கள் பெண்கள் எனவும் அப்புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

## படையினரின் துப்பாக்கி வேட்டில் 13 வயது சிறுமி படுகாயம்!

(பொத்துவில்)

மட்டக்களப்பு தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு சென்று பூசைவழிபாடுகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய பொதுமக்கள் மீது விசேட அதிரடிப்படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்து ள்ளனர். இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் உதயகுமார் சகுந்தலா என்ற 13 வயது சிறுமி பலத்த காயங்களுக்கு உள்ளாகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பூசைத்தட்டுடன் ஆலயத்திலிருந்து வந்து கொண்டிருந்த போதே விசேட அதிரடிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இச்சிறுமி ஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கரைப்பற்று தம்பிலுவில் வீதியில் நெல்சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான கட்டிடத்தில் நிலைகொண்டிருக்கும் விசேட அதிரடிப்படையினரே துப்பாக்கி பிரயோகம் செய்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு சுமார் 30 நிமிடத்திற்கு முன்னர் விடுதலைப்புலிகளுக்கும், விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் அக்கரைப்பற்று தம்பிலுவில் பிரதான வீதியில் மோதல்கள் இடம்பெற்றதாகவும் இதில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு பழிவாங்கும் முகமாகவே விசேட அதிரடிப்படையினர் பொது மக்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்திருப்பதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

## நேபாளத்தில் ..........

போதே இக்கோஷத்தையும் கொலையாளி கஜனேந்திராதான் என்ற கூச்சலையும் போட்டுச் சென்றனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மன்னரினதும் மனைவியினதும் புகைப்படங்க ளையும் மற்றும் தடிகளையும் ஏந்திச் சென்றனர். இவர்கள் மோட்டார் சைக்கிள்களில் சென்ற னர்.

இளவரசர் திபேந்திரா இக்கொலைகளைச் செய்யவில்லை. தானியங்கித்துப்பாக்கியும் தானாக வெடித்து இக் கொலைகளைச் செய்யவில்லை என்ற உண்மை தெரிய வேண்டும் என்று இவர்கள் கோஷம் எழுப்பினர்

புதிய மன்னராகப் பட்டம் சூடிக் கொண்ட கஜனேந்திராவும் அவரது மகன் பராஸ்ஷாவும் தான் இக்கொலைகளின் பின்னணியிலிருந்ததாக மக்கள் குரல் எழுப்பினர்.

### சதியில் இந்தியாவுக்கும் தொடர்பிருக்கிறதா?

மன்னர் பிரேந்திராவும் அவர் குடும்பத்தவர்களும் கொலை செய்யப்பட்டதற்கு இளவரசர் திபேந்திரா மீதும் தானியங்கித் துப்பாக்கி மீதும் காரணம் சொல்லப்படுவதை ஏற்றுக் கொள்ள மறுக்கும் நேபாள மக்கள் இக்கொலைகளுக்குப் 'பின்னணியில் பெரும் சதித்திட்டமிருக்கலாமென்றும் இச்சதியில் இந்தியாவுக்கும் பங்கிருக்கலாமென்றும் நேபாளிகள் கருதுகின்றனர். இதேசமயம் நேபாளத்தில் இயங்கும் மாவோசார்பு இயக்கத்தினர் இந் தெரியாத சர்வதேச சக்திகளின் கைகளும் இதில் சேர்ந்திருக்கலாமென்று தெரிவிக்கின்றன.

புதிய மன்னராக முடிசூட்டிக் கொண்டு அரண்மனையிலிருந்து கஜனேந்திரா குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் தமது வாசஸ்தலமான புதிய அரண்மனைக்குப் பவனியாகச் சென்ற போது மிகச்சிலரே கரகோஷம் செய்துவரவேற்றனர். பெரும்பாலோனோர் எதிர்ப்புக் கோஷங்களையே கிளப்பினர்.

நகரத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டாலும் நாட்டில் நிலைமை மோசமாகி வருவது பற்றி ஆலோசிப்பதற்காக நேபாளத்தின் ஆளும் கட்சியான தேசிய காங்கிரசின் மத்திய குழுக் கூட்டம் திங்கட்கிழமை நடைபெறுகிறது.

## நீதியரசரின் இறுதிக் கிரியை

(கொழும்பு)

நேற்று முன் தினம் கொழும்பில் தீடீரென காலமான ஓய்வு பெற்ற நீதியரசர் கே.பாலகிட்ணரின் இறுதிக் கிரியை இன்று முற்பகல் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறவிருக்கிறது.தெஹிவளை இன்ன பெயர்லைன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து முற்பகல் 11 மணிக்கு கனத்தை மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். நேற்று முழு நாளும் பெரும்பாலானோர் மறைந்த நீதியரசருக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

நங்கையர், ஆடவருக்குத் தேவையான நவ நாகரீக நகைகளுக்கு
மொடேர்ன் ஜுவலரி
Advt.
இல.18, மத்திய வீதி, மட்டக்களப்பு. தொ.பே: 065-22528
இல.32, கடற்கரை வீதி, காத்தான்குடி - 4 தொ.பே: 065-45081

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.